


31. மகாராஜர் பேச்சு

மகாராஜருக்குச் சீற்றம் பிறந்ததாம். பிறந்ததுமே, அம்பு போட்டானாம் ராமன் வாலி மீது. அவர் அழுதபோது தானும் உடன் அழுதானாம்.

நட்புக் காதலன்

அப்படித் தனக்கு இல்லாத கோபத்தையும் அழுகையையும் தன்பால் ஏறிட்டுக் கொண்டவன் யார்? அந்த மகாராஜர் யார்?

வாலி மீது அம்பு போட்டவன் ராமன் தானே? எனவே, மகாராஜர் வானர மகாராஜனான சுக்கிரீவனாகத்தானே யிருக்க வேண்டும்?

தன் மனைவியையும் அபகரித்துக் கொண்ட வாலி மீது சுக்கிரீவனுக்கு ஏற்பட்ட சீற்றம்தான் ராமனிடத்திலும் சீற்றமாகக் காணப்பட்டதாம். வாலி மேனியில் இரத்தம் கண்டதும் தம்பி கண்ணில் அழுகை வந்து விட்டது; அந்த அழுகை அப்படியே ராமன் கண்களிலும் வந்து விட்டதாம்.

இது வியாக்கியான சக்கரவர்த்தியான பெரிய வாச்சான் பிள்ளையின் அபிப்பிராயம். ஏறக் குறைய அவரது வாக்கிலேயே அந்த அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கிறது.

அவதார மூர்த்தியான ராமனுக்குச் சீற்றமோ, சோகமோ இல்லை; அன்பர்களின் உணர்ச்சிகளே அவன்பால் பிரதிபலித்தன என்பது வியாக்கியான சக்கரவர்த்தியின் கொள்கை.

ராமனது அன்பர்களில் சிறந்த ஒருவன் சுக்கிரீவன். சுக்கிரீவனோடு ஆறு சகோதரர்களாகி விட்டதாக ராமனே ஒப்புக் கொண்டிருக்கிறான்.

இத்தகைய சுக்கிரீவ மகாராஜாவிடம் ராமன் முதன் முதல் ஆலோசனை கேட்கிறான், மயிந்தன் அறிக்கையைக் கேட்ட பின்பு.

மும்மதில்கள் போல் வானர வீரர்கள் சூழ வீற்றிருந்த ராமன், உள்மதில் போல் தன்னைச் சூழ்ந்திருந்த நண்பர்களை நோக்கிப் பொதுவாகத் தான் அபிப்பிராயம் கேட்டான். இந்த நண்பர் கூட்டத்தில் சுக்கிரீவன், ஜாம்பவான், நீலன், அனுமன் முதலானவர்கள் காணப்படுகிறார்கள்.

இந்த நண்பர்களெல்லாம் மயிந்தனுடைய அறிக்கையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களே. எனவே, 'வந்தவனைச் சேர்த்துக் கொள்வதா, விட்டு விடுவதா? இந்த அறிக்கையிலிருந்து நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் என்ன?' என்கிறான் ராமன்.

இப்படி ராமன் பொதுவாக ஆலோசனை கேட்க, முதன் முதல் சுக்கிரீவன் தன் கருத்தை வெளியிடத் தொடங்குகிறான். காரணம், மகாராஜரின் அந்தஸ்து மட்டுமல்ல.

சுக்கிரீவனுடைய சுக துக்கங்களைத் தன்னுடைய சுக துக்கங்களாகக் கொண்டிருக்கும் ராமன்பால் சுக்கிரீவனுக்குள்ள நட்புக் காதலே முக்கிய காரணம் எனக் கருதலாம்.

பெரிய கண்களை மலர விரித்து நண்பர் கூட்டத்தை நோக்கிய ராமன் முன், தன் பெரிய கைகளைக் குவித்த வண்ணம் எழுந்து நிற்கும் சுக்கிரீவனைக் கண்முன் காட்டுகிறது இப்பாட்டு:

தடமலர்க் கண்ணனைத்
 தடக்கை கூப்பினான்,
'இடன் இது; காலம்ஈ(து)'
 என்ன எண்ணுவான்,
கடன் அறி காதலன்
 கழறி னானரோ,
சுடர்நெடு மடிமுணிச்
 சுக்கி ரீவனே.

[தடமலர்க் கண்ணனை—பெரிய தாமரை மலர் போன்ற கண்களையுடைய ராமனை.

தடக்கை—பெரிய கைகளை. இடன்—இடம். ஈது—இது. கடன் அறி காதலன்—கடமை இன்னதென்று தெரிந்துகொண்ட நண்பன். கழறினான்—உறுதியாகச் சொல்லலானான். சுடர் நெடுமணி முடிச் சுக்கிரீவன்—'மகாராஜா' என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சுக்கிரீவன்.]

ராமன் தான் மேற்கொள்ள வேண்டிய கடமை குறித்து நண்பர்களிடம் ஆலோசனை கூறுமாறு சொன்னதும், அந்தக் கடமை உடனே தன்னைச் சார்ந்துவிட்டதாக உணர்ந்து பேசுகிறான் சுக்கிரீவன். ராமனுடைய சுக துக்கங்கள் தன்னுடையவை என்பது இந்தக் 'காதலன்' கருத்து.


சுக்கிரீவன் காட்சி

இத்தகைய காதலுணர்வுடன் பேசத் தொடங்குகிறவன் ஒருவாறு தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டே,

தம்முனைத் துறந்தது தரும நீதியோ?
செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர்?

[தம்முனை—தன் தமையனை ராவணனை. செம்மையில்—செம்மையான குணங்கள் இல்லாத. சீரியோர்—சீரான நடத்தையுள்ளவர்.]

என்று இரண்டு கேள்விகள் கேட்கிறான்.



விபீஷணன் சிறந்தவன் என்ற அனலன் வார்த்தையை மயிந்தன் வாயிலாகக் கேட்டிருந்தார்களல்லவா? 'அரக்கர்களிலே சிறந்தவர்களோ, தரும நீதி தெரிந்தவர்களோ இருக்க முடியாது' என்கிறான் சுக்கிரீவன்.

அத்தகைய அரக்கரில் ஒருவன் தமையனைத் துறந்து வந்தானென்றால், தரும நீதியையும் அறவே துறந்து வந்திருப்பதாகத்தான் அர்த்தமாம்.

தமையனையும் தாய் தந்தையரையும் ஆசிரியன்மாரையும் அரசனையும் துறப்பது தகாத செயல். பகைவர் நெருங்கி வந்ததும் கைவிடுதல் என்பது சிறிதும் தகாத செயலேயாகும் என்கிறான் சுக்கிரீவன். தமையனுக்காகப் போரில் உயிரை விபீஷணன் விட்டு விடுவானானால் அதுதான் தருமநீதி என்கிறான்.

விபீஷணன் கபடமாக வந்திருக்க வேண்டும்; அல்லது அச்சத்துடன் வந்திருக்க வேண்டும் என்பது சுக்கிரீவன் ஊகம். 'நமக்கு வஞ்சகனும் வேண்டாம்; கோழையும் வேண்டாம்' என்கிறான்.

தருமத்திற்கு மாறாகத் தமையன் நடக்கிறான் என்று உண்மையாகவே விபீஷணன் கருதி அவனைத் துறந்திருந்தாலும் பகைவர்களாகிய நம்மிடம் வந்து சேர்ந்திருக்க வேண்டாமே! ஒதுங்கியிருந்துவிடலாமே!

ராவணனுடைய வாழ்விலும் செல்வத்திலும் பங்கு கொள்ள உறவு பூண்டிருந்து, பகைவர் வந்ததும் அந்த உறவை அறுத்துக் கொண்டவன், நம்மோடுதான் எப்படி உறவாக ஒட்டிக் கொண்டிருப்பான் !

கருணைக் கடலான ராமனுக்குக் கருணை தோன்றுவது இயல்புதான்; ஆயினும் நம்பிக்கையோடு நம்முடன் கலந்து கொள்ளுமாறு அனுமதிப்பது எப்படி.



மாரீசனுடைய வஞ்சகத்தையும் நினைவூட்டுகிறான் சுக்கிரீவன். ராம பாணத்தால் கடலில் தள்ளப்பட்டு உயிர் தப்பிய மாரீசன் தவமும் வேதாந்த விசாரமும் மேற் கொண்டிருந்தானே,—மருமகனுக்காக அந்த வேடத்தை விட்டுப் பொன் மான் வேடத்தில் வஞ்சிக்க வரவில்லையா !

அரக்கர் நல்லொழுக்கத்தை மேற்கொண்டதுபோல் காணப்பட்டாலும் அதில் ஊன்றி நிற்க மாட்டார்கள். சமயத்தில் ஒழுக்கமாகிய போர்வையை எறிந்து விட்டு நிஜ ஸ்வரூபத்தில் தோன்றுவார்கள்; அல்லது வேறொரு வஞ்சகப் போர்வை போர்த்துக் கொள்வார்களாம். மாரீசனை நினைவூட்டும் சுக்கிரீவனின் உட்கருத்து இது.

'நமக்கும் துணை வேண்டுமா ! அதிலும் ராவணன் தம்பியின் துணையா வேண்டியிருக்கிறது !' என்றும் கேட்கிறான் சுக்கிரீவன்.

மேலும், ராட்சஸ வதம் செய்து தர்மத்தை நிலைநிறுத்த வந்திருக்கிறவர்கள், இரக்கமில்லாத அரக்கரையே துணையாகக் கொள்வதா ? 'நாம் அரக்கர் உதவியின்றி அரக்கரை வெல்ல முடியாது' என்று தானே பிறருக்குத் தோன்றக் கூடும் !

இப்படியெல்லாம் தன் அபிப்பிராயங்களை வெளியிடுகிறான் சுக்கிரீவன், அடுக்கடுக்காக. கடைசியாக,

'வஞ்சனை இயற்றிட வந்த வாறலால்,
தஞ்சென நம்வயின் சார்ந்துளான் அலன் ;
நஞ்சினிற் கொடியனை நயந்து கோடியோ ?
அஞ்சன வண்ணா!'
என்(று) அறியக் கூறினான்.

[வந்தவாறலால் — வந்ததே அல்லாமல். தஞ்சென — தஞ்சமென்று; அடைக்கலம் என்று. நம்வயின் — நம்மிடத்து. சார்ந்துளான் அலன் — சேர்ந்துள்ளான் அல்லன். நஞ்சினிற் கொடியனை — விஷத்தைக் காட்டிலும்

கொடியவனான விபீஷணனை. நயந்து — விரும்பி. கோடியோ — கொள்வாயோ. அஞ்சன வண்ண — அஞ்சனம் போன்ற திருநிறம் வாய்ந்தவனே.]

விபீஷணன் வேஷக்காரன், மோசக்காரன், ஏற்றுக் கொள்ளத் தக்கவனல்ல என்றெல்லாம் தான் துணிந்ததைச் சொல்லி முடிக்கிறான் சுக்கிரீவன். எடுத்த எடுப்பிற்கு இசைந்தவாறு அமைந்திருக்கிறதா இந்தப் பேச்சு?

சுடர்நெடு மணிமுடிச்
சுக்கி ரீவனே

என்ற அந்தத் தோற்றப் பொலிவிற்கு ஏற்றவாறு மகாராஜாவின் பேச்சு அமையவில்லை யென்றே தோன்றுகிறது.

கடன்அறி காதலன்
கழறி னனரோ!

என்ற அந்தக் காதல் — துணிவும் துடிப்பும், தமக்கு ஏற்ற வாக்குப் பிரவாகம் பெறவில்லை!

வறண்டயர்ந்த ஆறு மணல் மயமாகக் காண்பது போல் உணர்ச்சி யற்ற கோவையாகச் சாமானியக் கவிஞர் வாக்கைத்தான் நினைவூட்டுகிறது சுக்கிரீவன் பேச்சு.

'மகாராஜரு'க் குரிய மாட்சியை — 'சுடர் நெடுமணி முடி'யின் அந்தச் சுடரொளியைச் சிறிதும் காணவில்லை இந்தப் பேச்சிலே!

கட்சிக்கு ஆதரவு

ராமன் கடனைத் தன்மேல் ஏறிட்டுக் கொண்டு, ராமன் பொதுவாக நண்பர்களை வினவியதற்குத் தானே பிரதிநிதியாக எழுந்து பதில் சொன்னான் சுக்கிரீவன். 'உன் கருத்து என்ன?' என்று ராமன் கேட்ட பின்பே பதில் சொல்லுகிறான் ஜாம்பவான். இவனும் சுக்கிரீவன் கருத்தையே ஆதரித்துப் பேசுகிறான்.

விபீஷணனைச் சேர்த்துக் கொள்வது சிற்றினம் சேர்வதே என்கிறான்:

பாதகர் நம்வயின்
படர்வ ராம்எனில்,
தீதில ராய்நமக்(கு)
அன்பு செய்வரோ?

[நம் வயின் படர்வராம் எனில் — நம்மிடத்தில் வந்து சேர்வாரானல்.] என்கிறான்.

ஜாம்பவானும் மாரீசனின் பொன்மான் வேஷத்தை நினைவூட்டுகிறான். அந்தப் 'பொன்மான் வேட்டை' யாகத்தான் முடியுமாம் விபீஷண சிநேகமும்!

பிறகு நீலன் என்ற சேனதிபதியின் கருத்தை அறிந்துகொள்ள விரும்புகிறான் ராமன். 'அண்ணனை வெறுத்து வந்தவனுடைய சீலத்தை நோக்கி நாம் தெளிந்து நம்ப முடியுமோ?' என்று சொல்லி இந்தச் சேனதிபதியும் மகாராஜாவை ஆதரிக்கிறான்.

மற்றுளாரும் ஒருமுகமாகச் சுக்கிரீவனை ஆதரித்து, வந்தவனை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுகிறார்கள்.

'மகாராஜ'ரை உள்ளிட்ட அன்பர்களெல்லாம் மனப் பூர்வமாக, எதிரியைக் கொள்வது குற்றம் என்றே உறுதி கூறி விடுகிறார்கள். இவர்களெல்லாம் ஆலோசனைக் குரியவர்கள் என்பதையும், குற்றமில்லாத கல்வி கேள்விகளை உடையவர்கள் என்பதையும் தெளிவுபடுத்துகிறான் கவி.

இந்த அன்பர்கள் ஏன் உண்மை காணவில்லை? 'அன்பர்களாதலின்' என்பது கவிஞன் குறிப்பு.


ராமபிரான் மீதுள்ள அன்பே அறிவுக் கண்ணை மூடி விடுகிறதாம்.

குற்றமில் கேள்வியர்,
அன்பு கூர்ந்தவர்,
பற்றுதல் பழுதெனப்
பழுது றாஒரு
பெற்றியின் உணர்வினர்,
முடியப் பேசினர்.

[குற்றமில் — குற்றமில்லாத. அன்பு கூர்ந்தவர் — அன்பு மிகுந்தவர்கள். பற்றுதல் — விபீஷணனைப் பற்றிக் கொள்வது. பழுது — பழுதாகும். பழுதுறா — பழுதுபடாத. பெற்றி — தன்மை. முடிய — முடிவான, தேர்ந்த, அபிப்பிராயமாக.]

குற்றமில் கேள்வியரும் அன்புமிகுதியால் உண்மை காணத் தவறிவிடுவார்களாம். இந்த விதமாக மந்திராலோசனை முற்றுப்பெற்றது போலவே காண்கிறது.

ஆனல் இந்த ஆலோசனை மன்றத்தில் ஆலோசனைக்கு மிக்க உரிமை வாய்ந்த ஒரு குரலை நாம் இன்னும் கேட்கவில்லையே, அன்பு அறிவை மூடிவிடாமலும், அறிவு அன்பை மீறி விடாமலும் செய்து கொண்டு தன் உள்ளத்தைத் தராசு போல் வைத்துக்கொண்டிருக்கிறவன் எவனே, அவன் எங்கே!



32. ஆலோசனை மன்றத்தில்

சொல்லின் செல்வன்

சுக்கிரீவன் முதலான வானரர்கள் ஒரே தீர்மானமாகத் தாங்கள் கருதிய முடிவை ஒருமுகமாய்ச் சொல்லி விட்டார்கள். அனுமனுடைய கருத்திற்கு மாறுபட்ட முடிவு அது. எனினும், அனுமன் இன்னும் தன் கருத்தைக் கூறுமல் மௌனமாகவே யிருக்கிறுன்.

மௌன வாக்கு

ஏற்கெனவே ஆலோசனை சொன்னவர்களைக் 'குற்றமில் கேள்வியர்' (குற்றமில்லாத கல்வி கேள்விகளை உடையவர்கள்) என்று கவிஞன் முடிவாகக் கூறிவிட்டான். இப்போது அநுமன் கருத்தை அறிந்து கொள்ள விரும்பும் ராமன் அனுமனை நோக்கி,

'செறிபெருங் கேள்வியாய்!'

[செறிபெருங் கேள்வியாய் – மிக்க கேள்வி நிறைந்துள்ளவனே.]

என்று அழைக்க ஆசைப்படுகிறுனும்.

அவர்கள் குற்றமில்லாத கேள்வியராயினும் அனுமனைப் போல் நிறைந்த பெருங்கேள்வியரல்லர். கேள்விகள் அடர்ந்த ஒரு தவக்காடு (தபோவனம்) அனுமன் என்பது குறிப்பு.

இந்தச் சொல்லின் செல்வனின் விநயப் பேச்சை முற்றும் கேட்டதும் 'பேரறிவாளன்' என்று இவனை ராமன் அழைக்கப் போகிறுன்.

ஆனுல் தொடக்கத்திலே வாய்விட்டு வெளிப்படையாக அவ்வளவு தூரம் கௌரவிப்பது லௌகிகம் என்று கருதவில்லை. எனவே அனுமனை நோக்கும் நோக்கிலேயே தன் உள்ளக் கருத்தை வெளியிடுகிறுன்.

கலாசாலைத் தலைவரான அறிஞர் ஒருவர் சில சமயங்களில் வெளிப்படையாகப் பேசாமலே தம் உள்ளக் கருத்தை ஒத்த மனமுள்ள புத்திசாலிகளான சில மாணுக்கர்களுக்கு உணர்த்திவிடுவது வழக்கம். இத்தகைய மாணுக்கர்களில் ஒருவன் அந்த நோக்கின் வாயிலாகவே தன் விசேஷ மதிப்பிற்குரிய ஆசிரியர் 'என்ன என்ன சொல்ல விரும்புகிறுர்!' என்பதை விவரமாக அறிந்து கொள்வான். இதை நான் நேரில் அறிந்திருக்கிறேன்.

அந்த மாதிரி ராமனும் இப்போது தன் பெருமதிப்பிற்குரிய 'சொல்லின் செல்வ'னை நோக்குகிறுன் என்று வைத்துக் கொள்ளலாம். வாய் பேசாமல் அந்தக் கண்களே பேசுகின்றன.

'உறுபொருள் யாவரும்
ஒன்றக் கூறினுர்;

செறிபெருங் கேள்வியாய்!
கருத்(து)என்?. செப்(பு)'என

நெறிதரு மாருதி
என்னும் நேரிலா

அறிவனை நோக்கினுன்
அறிவின் மேலுளான்.

[உறு பொருள் – பொருந்திய காரியம்; செய்ய வேண்டிய காரியம். ஒன்றக் கூறினுர் – ஒன்றுபட்டு ஒரே கருத்தைச் சொன்னுர்கள். நேரிலா அறிவன் – தனக்கு ஒப்பார் இல்லை யென்று சொல்லும்படி விளங்குகின்ற அறிவாளி.]

ராமன் பார்த்த பார்வையே மேலே சொன்னபடி யெல்லாம் உணர்த்தி விடுகிறதாம். அறிவனை அறிவன் நோக்கும்போது வாய்ச் சொற்கள் எதற்காக?

அதிலும் அறிவின் மேலுளான், (ராமன்) நிகரில்லாத அறிவனை நோக்கும்

போது, பள்ள மடையில் பாயும் வெள்ளம்போலக் கருத்துக்கள் பாய்ந்து செல்லும் என்பது குறிப்பு.

இந்தப் பாட்டிலே அனுமன்,

நெறிதரு மாருதி

என்று குறிக்கப்படுகிறான், கவிக்கூற்றாக.

பின்னர் ராமன் அனுமனை 'நெறியில் தோன்றினாய்!' என்று விளிக்கப் போகிறான், 'நெறி அல்லது ஒழுக்கமே பத்து மாதம் சுமந்து அனுமனைப் பெற்றெடுத்தது!' என்ற குறிப்பிலே.

அனுமன் பதில் சொல்லத் தொடங்கும் அடுத்த பாட்டிலேயே,

நுணங்கிய கேள்வியான்

[நுணுக்கமான கேள்வியறிவுடையவன்.]

என்பதும் கவிக்கூற்று. நெறி தரும் அறிவே அறிவு என்பதும், இந்த அறிவின் வளர்ப்புத்தாய் நுணுக்கமான கேள்வி என்பதும் குறிப்பு.

கல்வி கேள்வியறிவு எவ்வளவு நுணுக்கமா யிருக்கிறதோ அவ்வளவு வணக்கமாக அந்த அறிவாளி நடந்து கொள்வான். இத்தகைய அறிவாளியான அனுமன் பதில் கூறத் தொடங்கும் நிலையைக் கவிஞன் பின்வருமாறு காட்டுகிறான் :

வணங்கிய சென்னியன்,
மறைத்த வாயினன்,
நுணங்கிய கேள்வியான்
நுவல்வ தாயினான்

[சென்னி - தலை. மறைத்த வாயினன் - வாய் பொத்திக் கொண்டவனாகி. நுவல்வ தாயினான் - சொல்லத் தொடங்கினான்.]

அறிவின் நுணுக்கம்இருந்தால் வணக்கம் வரும், செயலிலும்பேச்சிலும். 'எனக்குத்தான் அது தெரியுமே, இது தெரியுமே' என்று வானம் நோக்கித் தலை நிமிர்ந்து ஆணவத்தில் விசுவரூபம் எடுப்பவர் நுண்ணறிவாளரல்லர்; நல்லறிவாளரல்லர்; மெய்யறிவாளரல்லர்.

இது தமிழர் பொதுமறை அருளிய பேரறிவாளரின் தேர்ந்த கொள்கை.

நுணங்கிய கேள்வியர்
அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல்
அரிது

என்ற குறளுக்கு இலக்கியம் தான்,

வணங்கிய சென்னியன்
மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியான்

என்று இங்கே காட்டப் பெறுகின்ற அனுமன்.

வசீகரமான தொடக்கம்

இந்த அறிவாளி, தான் தன் தோழருடனும் மகாராஜாவுடனும் முற்றும் முரண்பட்ட அபிப்பிராயத்தைத் தெரிவிக்கப் போகிறான். கருத்தை ஒளிக்காமல் தைரியமாகச் சொல்லவும் வேண்டும்; அதை உசிதமாகவும் விநயமாகவும் வெளியிடவேண்டும், இந்தச் சந்தர்ப்பத்தில் அனுமன் எப்படிப் பேசத் தொடங்குகிறான், பார்க்கலாம்!

'இங்கேயுள்ள அறிவாளர்களெல்லாம் ஆராய்ந்து கருத்தொருமித்து அபிப்பிராயம் தெரிவித்தாகி விட்டது. அறிஞனாகிய உனக்கு நான் சொல்லவேண்டியதும் உண்டோ!' என்ற பீடிகையுடன் தன் கருத்தை வெளியிடப் போகிறான்.





அபிப்பிராய பேதம் உள்ளவர்களை 'உத்தமர்' என்றும், 'தூயவர்' என்றும் கௌரவித்துப் பேசுகிறுன். அவர்கள் தன் கருத்திற்கு முரண்பாடாக வெளியிட்ட கருத்துக்களையும் 'தூயதே' என்று பாராட்டுகிறுன்.

எனினும் தன் அபிப்பிராயத்தைத் திடமாகத் தெரிவிக்கிறுன் :

தூயவர் துணிதிறன்
நன்று தூயதே;
ஆயினும் ஒருபொருள்
உரைப்பன் ; ஆழியாய் !
நீயன்என்(று) இவனையான்
அயிர்த்தல் செய்கிலேன் ;
மேயின சிலபொருள்
விளம்ப வேண்டுமால்

[துணிதிறன் – துணிந்து சொன்ன அபிப்பிராயம். நன்று தூயதே – மிகவும் தூய்மையானதே. ஆழியாய் – சக்கராயுதத்தை உடைய திருமாலே ; (இங்கே) ராமனே. அயிர்த்தல் செய்கிலேன் – சந்தேகிக்கவில்லை. மேயின சில பொருள் – அதற்குப் பொருந்திய சிலவிஷயங்களை.]

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று சாதாரணமாகச் சொல்லுகிறுர்கள் அல்லவா ? அப்படியே அனுமனும், 'வஞ்சர் வாள்முகம் (ஒளி முகம்) கண்டதோர் பொழுதினில்தெரியும்' என்கிறுன்.

விபீஷணனது ஒளி மயமான முகப்பொலிவினால் ஏற்கெனவே வசீகரிக்கப் பட்டவன் அனுமன். முதன் முதல் உறங்கும் போது பார்த்தான். 'குற்றமில்லாத, குணம் நிறைந்த, திருமுகம்' என்று தெரிந்து கொண்டான்.

மந்திராலோசனை மன்றத்தில் தன்னை இந்திரஜித்தன் கட்டிக் கொண்டு போய் நிறுத்திய போது தூதரைக் கொல்லலாகாதென்று ராவணனுக்கு விபீஷணன் புத்தி சொன்ன போதும் அந்த முகப் பொலிவைக் கவனித்திருக்கிறுன்.

ஆகவே அனுமன்,

உள்ளத்தின் உள்ளதை
உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே
[விளம்பும்

[உரையின் முந்துற – வார்த்தை வருவதற்கும் முன்பாக.]

என்று சொல்லி விட்டு, விபீஷணன் வந்த காரியத்தைத் தான் ஊகித்தறிந்த வண்ணம் வெளியிடுவதாகப் பாடல்கள் காணப்படுகின்றன.

பேச்சினிடையே செருகு கவிகளா?

விபீஷணன் வருகைக்கு ராஜ்ய ஆசை காரணம் என்று வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள்பட அமைந்திருக்கும் பாடல்கள் கம்பன் வாக்காக இருக்க முடியுமா ? தக்க பதிப்பு இன்னும் வெளிவராததால் அது குறித்துத் தீர்மானமாக முடிவு கூறுவதற்கில்லை.

எனினும், கம்ப ராமாயணத்தில் காணும் விபீஷண குணசித்திரத்திற்குப் பொருத்தமில்லாத பாடல்கள் அவை என்பதும், அப்பாடல்களில் கம்பனது முத்திரை காணப்படவில்லை யென்பதும் என் அபிப்பிராயம்.

இது எப்படி யிருந்தாலும், தான் விபீஷணனைச் சந்தித்த இரண்டு சந்தர்ப்பங்களையும் அனுமன் தன் பேச்சினிடையே குறிப்பிட்டு விபீஷணனைப் பற்றி ராமனே ஊகஞ் செய்து கொள்ளுமாறு விட்டு விடுவது பொருத்தமாயிருக்கிறது.

இந்திரஜித்தால் ராவண சபைக்குத் தான் இழுத்துச் செல்லப்பட்டபோது தன்னைக் கொன்று விடும்படி ராவணன் கொலையாளிகளை ஏவியதும், விபீஷணன் தக்க வேளையில் தடுத்தான் என்பதை முதன் முதல் ராமனுக்கு அறிவிக்கிறான் அனுமன். விபீஷணனது அந்தச் செயலிலிருந்து சுக்கிரீவனுதியோர் கருதியவாறு வஞ்சகனுயிருக்க முடியாது என்று ராமன் ஊகித்துக் கொள்ளக்கூடுமல்லவா!

விபீஷண விலாசம்

'நல்லவன் போல் நடிப்பவன் அன்று விபீஷணன்' என்பதற்குச் சான்ருகத் தான் கண்ட விபீஷணன் இல்லத்தையும் வருணிக்கிருன் அனுமன் :

நிந்தனை நறவமும்
நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன் ;
தரும தானமும்
வந்தனை நீதியும்
பிறவும் மாண்பமைந்(து)
அந்தணர் இல்லெனப்
பொலிந்த தாமரோ.

[நிந்தனை நறவமும் – நிந்தனைக்கு உரிய கள்ளும். நெறியில் ஊன்களும் – நீதிநெறி இல்லாமல் ஹிம்ஸை செய்வதால் கிடைக்கிற இறைச்சி வகைகளும். தந்தன கண்டிலேன் – கொண்டு வைத்திருப்பனவற்றை நான் காணவில்லை. மாண்பு அமைந்து – மாட்சியுடன் அமைந்து. இல்லென – இல்லம் போல.]

விபீஷண மாளிகையின் வசீகரமான வெளித் தோற்றம், சுந்தர காண்டத்தில் வருணிக்கப்படுகிறது. புண்ணியனுக்கு இசைந்த புனித அழகு தந்தன, பளிங்கும் பவளமும் அந்த மாளிகையிலே.

பசுஞ்சோலையாகிய கற்பகச் சோலைக்கிடையே மரகதத்தைக் கிரிட்டு அமைத்த பவளம் போலவும் தூய பளிங்கு போலவும் காணப்பட்டது விபீஷணன் இல்லம்.

இங்கே, அனுமன் ராமனுக்கு அந்த வசீகரமான வெளித்தோற்றத்தைக் குறிப்பிடாமல், அந்த அழகிய மாளிகையில் உட்புறத் தூய்மையின் வசீகரத்தைப் புலப்படுத்துகிருன்.

தான் பார்த்த அரக்கர் வீடுகளில் எல்லாம் கள்ளுக் குடங்களும் மாமிச வகைகளும் மலிந்து காணப்பட, மருந்துக்குக் கூட அவை காணப்படவில்லையாம் விபீஷண பவனத்திலே.

தருமத்தைக் கண்டானும் ; தானத்தைக் கண்டானும் ; நீதியைக் கண்டானும் ; வந்தனை வழிபாடுகளைக் கண்டானும். அத்தகைய சூழ்நிலையுடன் ஜொலித்தது மாளிகையின் உட்புறம் என்பது குறிப்பு.

ராம ராஜ்யமாகிய அயோத்தியில் ஒவ்வொரு மாளிகையும் ஒரு தர்மாலயமாக ஜொலித்ததென்று கவிஞன் வருணித்திருக்கிருன், 'நகரப் படல'த்திலே:

ஊனமில் அறநெறி
உற்ற

மாளிகைகள் என்கிருன் கவி.

அனுமனே ஒரே ஒரு தர்மாலயம் தான் காண்கிருன் இலங்கையில், — ராம ராஜ்யச் சுடர்ப்பொறி ஒன்று அங்கே தெறித்து விழுந்து விட்டது போல. அதுதான் விபீஷணன் இல்லம்.


விபீஷணனுடைய தர்மாலயத்தின் மாட்சியை வாயார மனமாரப் பேசும் அனுமன்,

அந்நணர் இல்லெனப்
பொலிந்த தாமரோ

என்று வியந்து அந்தத் தூய அழகில் உள்ளம் பறி கொடுத்தவனைப் போலப் பேசுகிருன்.

விபீஷண தர்மாலயம் ஒரு மகரிஷியின் ஆசிரமம் போல் பொலிகின்றதாம். இதிலிருந்தே விபீஷணனை ராமன் தெரிந்து கொள்ளக் கூடுமல்லவா ?

கம்பனுடைய விபீஷண சிருஷ்டி எவ்வளவு அற்புதமாக நடைபெற்று வருகிறது ! அரக்கனையா கண்டான் அந்த விபீஷணப் பவனத்திலே இந்தச் சொல்லின் செல்வன் ? அந்த அரக்க வாழ்க்கையை உதறித்தள்ள அந்தப் போக மாளிகையை ஒரு தபோவனமாக்கிக் கொண்ட ஒரு மகரிஷியை அல்லவா கண்டு வந்திருக்கிருன் !



33. அனுமன் பேருரை

ராவணன் சீதையைப் பயமுறுத்திச் சென்ற பின், திரிசடை ராவணனைப் பற்றிய இரகசியம் ஒன்றைச் சொல்லிச் சீதையின் பயத்தைப் போக்கிறாள். 'அயல்மாதை வலியத் தீண்டினால் அப்போதே ராவணன் பத்துத் தலையும் நூறாகப் பிளந்து அழியும்!' என்பது தான் அது.

திரிசடையின் பண்பாடு

பிரமதேவன் கொடுத்திருந்த அந்தச் சாபம் பலருக்கும் தெரியாது. அரக்கர்களுக்கே தெரியாத இரகசியமாக அதை ராவணன் மறைத்து வைத்திருக்க வேண்டும். எனினும் தம்பி விபீஷணனுக்கும் மகள் திரிசடைக்கும் தெரிந்திருக்கக் கூடியது தானே!

இத்தகைய இரகசியத்தைச் சீதா பிராட்டிக்கு இனிது கூறி அச்சம் போக்கினாள் விபீஷண புத்திரியென்றால், மேலே சொன்ன விபீஷண பவனம் தருமதானங்களுக்கு வளர்ப்புப் பண்ணையாக இருந்தது போல் திரிசடை யென்ற பெண் கொடிக்கும் எத்தகைய வளர்ப்புப் பண்ணையாக உதவியிருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

எனவே, விபீஷண தர்மாலயத்தின் மாண்பு காட்டி விபீஷணனது குண மாட்சியை உணர்த்த விரும்பும் அனுமன், திரிசடையை வளர்த்த பெருமையைத் தான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாண்பின் சிகரமாய்க் காட்டுகிறான்.

'விபீஷணன் மகள்தான் என்னுடைய இறைவியாகிய சீதா பிராட்டிக்கு ஆறுதலும், உயிர் தரிக்கும் ஆற்றலும் அளித்தாள்' என்ற அனுமன் வாக்கிலே, சொல்லின் செல்வனின் இனிய குரலையும் கேட்பது போலத் தோன்றுகிறது:

அன்னவன் தனிமகள்,
'அலரின் மேல்அயன்
சொன்னதோர் சாபம்உண்(டு);
உன்னைத் துன்மதி
நன்னுதல் தீண்டுமேல்
நணுகும் கூற்(று)'என,
என்னுடை இறைவிக்கும்
இனிது கூறினாள்.

[அன்னவன் தனிமகள்—அந்த விபீஷணனுடைய ஒப்பற்ற மகள். அலரின் மேல் அயன் — மலரின் மேல் வீற்றிருக்கும் பிரமதேவன். துன்மதி – கெடுமதியுள்ள ராவணன். உன்னை... நன்னுதல்-பெண்ணாகிய உன்னை. நணுகும் கூற்று—நமன் அவனைத் தீண்டுவான். என – என்று. இறைவி – தலைவி.]

'தாயைப் போலே பிள்ளை; நூலைப் போலே சேலை' என்றவாறு விபீஷணனுடைய தாயுள்ளத்திற்குச் சான்றாகத் திரிசடையை நினைவூட்டிக் கொள்கிறான் அனுமன்.

'விரைவின் வந்தான்!'

'இந்தச் சந்தர்ப்பத்தில் தமையனைத் துறந்து வந்து விட்டானே, நம்பத் தக்கவனல்லன்' என்று சுக்கிரீவன் ஆகியோர் அபிப்பிராயப் பட்டார்களல்லவா? அந்த அபிப்பிராயத்திற்கு மாறாக அவர்களது அந்த வார்த்தையையே பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறான் சொல்லின் செல்வன்:

பெற்றுடைய பெருவரமும்
பிறந்துடைய வஞ்சனையும்
பிறவும், உன்கை
வில்–தொடையின் விடுகணையால்
வெந்தொழியும் எனக்கருதி
விரைவின் வந்தான்,
உற்றுடைய பெருவரமும்
உகந்துடைய தண்ணளியும்
உணர்வும் நோக்கின்

மற்றுடையர்
தாம்உளரோ
வாளரக்கன்
அன்றியே
தவத்தின்
மிக்கார்?



பெருஞ் சக்தியை ஒருவன் வஞ்சனை வழிக்கே உரிமையாக்கினன். மற்றவன் அருள் நெறியில் முழுக்க முழுக்கப் பயன் படுத்திக் கொண்டான்.

அவன் 'என் தம்பி விபீஷணனல்ல; வஞ்சனை தான்' என்பதுபோல் வஞ்சனையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தான். இவன் 'என் உகப்பிற்கு உரிய உறவினர் அரக்கரல்ல; அருள், நல்லுணர்வு முதலான தெய்வ குணங்களே' என்று இவற்றையே பேணிப் பாதுகாத்து வந்தான்.

இருவரும் இரத்த பந்துக்களாயினும் உள்ளத்தின் உறவிலே முற்றும் முரண் பட்டவரே. ஆனல் திடீரென்று இந்தச் சந்தர்ப்பத்தில் உறவை அறுத்துக் கொண்டதேன்?

எப்படியாவது அண்ணனைத் திருத்தி நல்வழிப் படுத்தலாம் என்று எண்ணியிருந்தவனுக்கு ஆசை நிராசையாகி விட்டது மந்திராலோசனை மன்றத்திலே.

கடைசி மருந்தாக — ராவணனுக்கு ஒரு சர்வரோக நிவாரணியாக — விபீஷணனுடைய நுண்ணுணர்வும் தண்ணளியும் போற்றி வைத்திருந்தது பிரகலாத சரித்திரம். ஆனல் இந்த மருந்தே கொல்லும் நோயைத் துரிதப் படுத்தி விட்டது!

ராவணனுடைய பெரு வரத்தின் சக்தியையும் வஞ்சனையின் சக்தியையும் வேறு வகை ஆற்றல்களையும் எப்போதுமே பிரமாதமாய்க் கருதியவனில்லை விபீஷணன். இப்போதோ, அவையெல்லாம் அழிந்து போகும் காலம் நெருங்கி விட்டது என்றே எண்ணி வந்திருக்கிறனும்.

'உன் கை வில் - தொடையின் விடு கணையால் வெந்தொழியும் எனக்கருதி விரைவின் வந்தான்' என்றனல்லவா அனுமன்! இதே கருத்தை ஏற்கெனவே ராவணனிடம் விபீஷணன் முன்னிலையிலேயே வெளியிட்டிருக்கிறன்.

ஈட்டிய
வலியும்,
மேனாள்
இயற்றிய
தவமும்,
யாணர்
கூட்டிய
படையும்
தேவர்
கொடுத்தநல்
வரமும்
கோட்பும்
திட்டிய
பிறவும்
எய்தித்
திருத்திய
வாழ்வும்
எல்லாம்
நீட்டிய பகழி
ஒன்றால் முதலொடும்
நீக்க நின்றான்

என்று ராவணனை நோக்கி அனுமன் கூறியதை அரக்கர்களெல்லாம் கேட்டுக் கோபங் கொண்டார்கள்; சற்றுத் திகிலடைந்தார்களென்றும் கருதலாம்.

விபீஷணனுடைய முகமும் கண்களுமே மௌன பாஷையில் அனுமன் வாக்கை அப்படியே உறுதிப் படுத்தியிருக்க வேண்டும். 'திருத்திப் பார்க்க இன்னும் அவகாசம் இருக்கிறது; இல்லாவிட்டால் இந்த அனுமன் தீர்க்கதரிசிதான்!' என்ற எண்ணங்கள் விபீஷணன் உள்ளத்தில் ஓடியிருக்க வேண்டும்.

விபீஷணன் உணர்வை அனுமன் உணரக்கூடியவன்தான் என்பதற்கு, 'அவன் உணர்வைத் தன் உணர்வினல் உணர்ந்தான்' என்று கவிக் கூற்றாக ஏற்கெனவே (சுந்தர காண்டம் — ஊர்தேடு படலத்தில்) வந்திருப்பதைச் சான்றாகக் கொள்ளலாம்.

இப்படி விபீஷணன் உணர்வைத் தன் உணர்வினல் உணர்ந்து கொள்ளக்கூடிய அனுமன், ராவணனுடைய தவ பலம் முதலிய பலங்களெல்லாம் ராமபாணத்தால் சாம்பலுமின்றி வெந்தொழிந்து போகும் என்ற அபிப்பிராயமே விபீஷணன் அபிப்பிராயமாக இருக்கவேண்டும் என்று துணிந்தது பொருத்தம்தான்.

கிணற்றுக்குப் பயந்த கடல்!

விபீஷணன் நம்பிக்கைக்கு உரியவன் என்பதை வற்புறுத்தியபின் அதற்கு

நேர் எதிரான அபிப்பிராயம் சரியாக இருந்தாலும் விபீஷணனைச் சந்தேகித்து விலக்குவது சரியன்று என்பதாகக் கூறி முடிக்கிறான்:

தேவர்க்கும் தானவர்க்கும்
திசைமுகனே முதலாய
தேவ தேவர்
மூவர்க்கும் முடிப்பரிய
காரியத்தை முற்றுவிப்பான்
மூண்டு நின்றாய்;
ஆவத்தின் வந்(து) அபயம்
என்றானை அயிர்த்(து) அகல
விடுதி யாயின்,
கூவத்தின் சிறுபுனலைக்
கடல்அயிர்த்த(து)
ஒவ்வாதோ?
கொற்ற வேந்தே!

[தானவர் – அசுரர்கள். திசைமுகன் – பிரமதேவன். முற்றுவிப்பான் – முற்றுவிக்கும் பொருட்டு. ஆவத்தின் – ஆபத்தில். அயிர்த்து – சந்தேகித்து. கூவத்தின் – கிணற்றின். கொற்ற வேந்தே – வெற்றியுள்ள அரசனே.]


விபீஷணனைப் பற்றி நிச்சயமாக எதிரி என்று திர்மானித்து விடச் சான்று இல்லா விட்டாலும், ராவணன் தம்பி சந்தேகத்திற்கு உரியவன் தானே! இதுவும் முன்னே பேசியவர்களின் கட்சி. இதை எவ்வளவு சுலபமாகத் தவிடு பொடியாக்கி விடுகிறான் இந்தச் சொல்லின் செல்வன்!

அனுமனுடைய நாவீறு இங்கே உச்ச நிலை அடைந்துவிடுகிறது. ராமனுடைய அவதாரப் பெருநோக்கையும் உய்த்துணர்ந்து கொண்டவன் போல் பேசுகிறான்.

'வீர சமுத்திரமாய்த் தியாக சமுத்திரமாய்க் கண்ணுக்கு எட்டாத தூரத்திலும் வரம்பின்றி விரிந்து கிடக்கும் மகா சக்தியின் பிரளயமாய் நிற்கிறாயே! அற்பக் கிணற்று நீரால் சமுத்திரத்திற்கு ஆபத்து வந்து விடும் என்ற அச்சமோ?' என்று கூறி முடிக்கும் இந்த முடிவுரை, சொல்லின் செல்வத்தை மெய்யறிவுச் செல்வத்துடன் வாரிப் பொழிவதுபோல் அமைந்து விடுகிறது.

விநய சிகரம்

இந்த முடிவுரையின் சிகரமாக வருகிறது.



ஆதலால் இவன்வரவு
நல்வரவே எனஉணர்ந்தேன்;
அடியேன் உன்தன்

வேதநூல் எனத்தகைய
திருவுளத்தின் குறிப்பறியேன்

என்ற விநய சம்பத்து. இந்த வார்த்தையோடு பேச்சை நிறுத்தி விடுகிறான் அனுமன்.

என்று விட்டான்.

என்பது கவிக் கூற்று.

பிரசங்கத்தை எப்படி வசிகரமாகத் தொடங்குவது என்பதையும் சொல்லின் செல்வன் அறிவான். அதி வசிகரமாக எப்படி முடிப்பது என்பதையும் அறிவான்.

'இன்னும் ஒரு கவளம் சாப்பிடலாமே' என்று சபலம் ஏற்படும்போதே அந்தக் கவளத்தை உட்கொள்ளாது எழுந்து விடவேண்டுமென்று ஆரோக்கிய சாஸ்திரிமார் கூறுவதுண்டு. சொல் விருந்திலும் இந்த ஆரோக்கிய நியதியை ஏற்படுத்திக் கொள்வது நலம். இதை நன்கறிந்தவனே சொல்லின் செல்வனாகத் திகழ முடியும்.

வங்க நாட்டிலிருந்து அமெரிக்காவுக்குப் போயிருந்த வாசாலகர் ஒருவர் வசிகரமாகச் சொற்பொழிவாற்றினர். இறுதிப் பகுதி மிகவும் வசிகரமாக அமைந்து விட்டது.

கேட்டுக்கொண்டிருந்தவர்களுக் கெல்லாம் ஒரே உத்ஸாக வெறி. இந்த உச்ச நிலையில் அப்படியே தம் பிரசங்கத்தை நிறுத்தி விட்டார் சொற்பொழிவாளர்.

'பாபூ! இன்னும் பேசவேணும்' என்று ஒலித்தது ஒரு குரல், அந்த ஜனக் கடலினிடையே. ஆனால் இந்தப் 'பிரசங்க சமுத்திரம்' அலையடித்து அறவே ஓய்ந்து போன கடல் போல் அப்படியே அடங்கி நின்றது.

'பாபூ! பாபூ! பேசு, பேசு; எவ்வளவு வசிகரமாய்ப் பருகினேன் நான்! இன்னும் அந்த வாக்குப் பிரவாகத்தைப் பருக ஆசைதான்' என்றாள் அந்த அமெரிக்க மாது.

'அம்மா! அப்படி நீ உணர்கின்ற இடத்தில் தானே நான் நிறுத்திவிட வேணும்!' என்று சொல்லிக் கொண்டே பாபு இறங்கிவிட்டார் பிரசங்க மேடையிலிருந்து.

நமது சொல்லின் செல்வன் எத்தனையோ கலைகளுடன் பிரசங்கக் கலையின் இரகசியங்களை யெல்லாம் நன்குணர்ந்தவன். எனவே,

'வேதநூல் எனத்தகைய
திருவுளத்தின் குறிப்பறியேன்'
என்று விட்டான்.

என்கிறான் கவிஞன்.

இந்த அருமையான பாட்டின் முன் இரண்டு அடிகளிலேயே அனுமன் பேச்சை இப்படி முடித்து விடுகிறான். பின் இரண்டு அடிகளை எப்படிப் பூர்த்தி செய்வது, பாட்டின் சௌந்தரிய சொரூபத்திற்குக் குறைவின்றி!

பாட்டு முழுமையும் பாருங்கள் :

'ஆதலால் இவன்வரவு
நல்வரவே எனஉணர்ந்தேன்;
அடியேன் உன்தன்

வேதநூல் எனத்தகைய
திருவுளத்தின் குறிப்பறியேன்'
என்று விட்டான்,


காதல்நான் முகனாலும்
கணிப்பரிய கலையனைத்தும்
கதிரோன் முன்சென்(று)

ஓதினன் ஓதநீர்
கடந்துபகை கடந்(து) உலகை
உய்யக் கொண்டான்.

[காதல் நான்முகனாலும் – கலைமகளைக் காதலிக்கும் பிரமதேவனாலும். கணிப்பரிய – கணக்கிட முடியாத. கதிரோன் – சூரியன். ஓதினன் – பக்தியுடன் கற்றான். ஓதநீர் – கடல். பகை கடந்து – பகைக் கடலையும் கடந்து. உலகை உய்யக் கொண்டான் – உலகம் உய்யுமாறு செய்தான்.]

'கலைக் கடல் கடந்தான்; தெற்குக் கடலையும் கடந்தான்; பகைக் கடலையும் கடந்தான்; உலகம் உய்ய இம்மூன்று கடல்களையும் கடந்தான்' என்று சொல்லின் செல்வனைக் கட்டியங் கூறி அறிவிப்பதுடன் முற்றுப் பெறுகின்றது செய்யுள்.

சொல்லின் பிரவாகம் ஓய்ந்தும் அந்த இசை வெள்ளம் மௌனமாய்ப் பெருகிய வண்ணமாகவே யிருக்கிறது. பேசிய மூர்த்தியின் கீர்த்தி வெள்ளமும் இசை வெள்ளத்தோடு இசைந்து கலந்து பெருகுகிறது.



34. பேசியதும் பேசாததும்

அதி உசிதமாகத் தொடங்கிய சொற்பொழிவு வெகு விநயமாக முற்றுப் பெற்றது. அறிவுரையெங்கும் ஊடுருவிக் கிடந்த விநயம் இறுதியில் விசுவருபம் காட்டுவது போலத் தோன்றுகிறது.

'என்ன பேரறிவு! ஆஹா, என்ன பெருவிநயம்!' என்று எல்லாரும் பிரமித்துப் போகிறார்கள். அனுமான கருத்துடன் முற்றும் முரண்பட்டிருந்த மகா ராஜாவை உள்ளிட்ட எல்லாரும்தான்.

கவிஞனே தன் மனக் கண்முன் தோன்றிய அனுமன் பேச்சைக் கேட்டுத் திகைப்பும் வியப்புமாகி விட்டதுபோல் பாட்டின் பிற்பகுதியை முடிக்கிறான்;

காதல்நாள் முகனுறும்
கனிப்பரிய கலையனைத்தும்
கதிரோன் முன்சென்(று)
ஓதினான், ஓதநீர்
கடந்து,பகை கடந்(து)
உலகை
உய்யக் கொண்டான்.

என்பதாக.

ராமனும் வியந்து பாராட்டுகிறான் அனுமன் வார்த்தையை. அனுமனை நேர் முகமாகக் கொண்டாடி விட்டு, மற்றை யோரை நோக்கியும், 'இந்த அனுமன் வார்த்தை சீரானது; மிகவும் சீரானது' என்கிறான்.

இதை யொட்டித் தானும் தன் கருத்தைத் தெரிவிக்கப் போவதாகப் பீடிகை போட்டு ராமன் பேசத் தொடங்குகிறான்.

ராமன் பேருரையின் தொடக்கம்

ஒரு பிரசங்கத்தில் மெய்ம்மறந்து ஈடுபட்டிருந்தவன் சொன்னான், பிரசங்கம் முடிந்ததும்: 'நான் இந்த வார்த்தையை வார்த்தையாகவா கேட்டேன்! செவியே வாயாக அமுதத்தையல்லவா பருகிக் கொண்டிருந்தேன்!' என்பதாக. ராமன் நிலையும் இது.

அனுமன் பேச்சைக் கேட்டபின் ராமன் பேசத் தொடங்கிய இந்த நிலையை இதோ பாருங்கள்:

மாருதி வினய
வார்த்தை செவிமடுத்(து)
அமிழ்தின் மாந்திப்,
'பேரறி வாள!
நன்று நன்(று)' எனப்,
பிறரை நோக்கிச்,
'சீரிது; மேல்இம்
மாற்றம் தெளிவுறத்
தேர்மின்' என்னா,
ஆரியன் உரைப்ப
தானான்; அனைவரும்
அதனைக் கேட்டார்.

[மாருதி - அனுமன். செவி மடுத்து - காதால் கேட்டு. அமிழ்தின் மாந்தி - அமுதம் போலப் பருகி. சீர் இது மேல் - இது மிகவும் சீரானது. இம்மாற்றம் - இனி இந்த என் வார்த்தையை. தேர்மின் - ஆலோசித்துப் பாருங்கள். ஆரியன் - பெரியோன்.]

மாருதி பேச்சுக்கு மறு பேச்சு உண்டோ!— என்ற விதமாகத்தான் ராமன் பேசத் தொடங்குகிறான். அனுமன் வடித்துச் சொல்லி விட்டானும் விஷயத்தை. இந்த ஆலோசனைக்கு இணங்கவே விஷயத்தை முடிவு செய்து கொள்ளலாம் என்கிறான் ராமன்.

அனுமன் அபிப்பிராயத்தை மறுப்பவர்கள் ஸாராம்சத்தில் ஒரே ஒரு கருத்தைக் கொண்டுதான் மறுக்கக் கூடும்.

அதாவது, விபீஷணனை அங்கீகரித்தால் ஆபத்து ஏற்படக்கூடும் என்பதே.

இதன் பொருள் என்ன! நமக்கு வெற்றிவேண்டும்; வாழ்வு வேண்டும். இந்த நிலையில் அடைக்கலம் அடைந்த வனைக் கைவிட்டாவது நமது வெற்றி யைத் தேடிக்கொள்ள வேண்டும். 'இந் தக் கொள்கை எனக்கு உடன்பாடன்று' என்கிறான் ராமன்.

வினையும் பயனைக் கருதாமல் அபய தானம் செய்வதே தன் விரதம் என்கிறான், சரணாகத ரட்சணம் செய்யத் தோன்றி யிருக்கும் ராமன். எப்போது வந்தால் என்ன! அவன் எப்படிப்பட்டவனு யிருந்தால் என்ன!

ராமனது லட்சிய புருஷர்கள்

குலத்து முன் னேனுகிய சிபிச் சக்கரவர்த்தியின் நினைவு வருகிறது. தன்னைச் சரண மடைந்த ஒரு புரு வுக்காகத் தன் உயி ரையே கொடுக்கு மாறு தராசுத் தட் டில் ஏறி நின்ற அந் தத் தியாக மன்ன னது வம்சத்திலே பிறந்திருப்பவன்— அந்தக் கதையிலே ஊறிக் கிடக்கும் உள்ளமுடைய வன்,—'என் உயி ருக்கு ஆபத்து வரு மோ! என்று அஞ்சிச் சரண மடைந் த வனைக் கைவிடு தல் தகுதி யன்று' என்கிறான்.

திருமால் யானைக்கு அபயம் கொடுத்த பிரசித்தமான 'கஜேந்திர மோட்சக் கதையையும், சிவபெருமான் மார்க்கண்டேய னுக்கு அருள் செய்யுமாறு யமனை உதைத்த கதையை யும்சொல்லுகிறான், அபயதானத்தின் பெருமையை வற் புறுத்துவதற்காக.

சிவபெருமான் விஷபானம் செய்த கதையையும் மேற்கோளாகக் காட்டி அடைக்கலம் அடைந்தவரை ஒரு போதும் கைவிடலாகாது என்கிறான்.

சிவ பெருமானுடைய தியாகத்தைக் குறிப்பிட்டவன், அற்பப் பிராணியாகிய புரு ஒன்று, பெண் பறவையைப் பிடித் துக்கொண்டு தன்னையும் பிடிக்க வந்த வேடனும் குளிர் காயுமாறு வசதிசெய்து கொடுத்து, அவன் பசி தீருமாறு அந்த நெருப்பில் தானும் விழுந்து விட்டது



என்ற அந்தக் கதையையும் சொல்லுகிறான்.

ஜடாயு சீதைக்காக உயிர் கொடுத்த அந்த உயிர்த் தியாகம் அண்மையில் நிகழ்ந்தது தானே. சிபிச் சக்ரவர்த்தி தொடங்கி வைத்த தியாக பரம்பரை, அந்தக்'கழுகுப் பெரியப்பா' வரை தொடர்ந்து வந்து விட்டது போலப் பேசுகிறான்.



பேச்சின் இறுதிப் பகுதி

தண்டகாரணிய முனிவர்களுக்கு அபயம் அளித்த அந்தக் கொள்கைதான், அபயம் வேண்டி வந்த விபீஷணன் விஷயத்திலும் கையாளப்பட வேண்டும் என்கிறான். ராவணனே 'அருளுடை வீர! நின் அபயம்' என்று அடைக்கலம் புகுந்து விட்டால், அவனும் அங்கீகரிக்கத் தக்கவன் என்பதல்லவா ராமனது அபயதானக் கொள்கை!

இந்தப் பேச்சின் இறுதியில், விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று அபிப்பிராயப்பட்ட சுக்கிரீவனையே வேண்டிக் கொள்கிறான், அவனை அழைத்து வரும்படி.

வேண்டாத விவகாரம்

இந்தப் பேச்சிலே விபீஷணன் ராஜ்ய ஆசையுடன் வந்தான் என்று சொல்வதற்கு அவசியமே கிடையாது. அபயதானத்தின் அவசியம் ஒன்றே அப் பேச்சின் தனிப்பெரு நோக்கம். எப்படிப்பட்ட மகாபாதகனானாலும் சரணம் அடைந்தவனைத் தள்ளிவிட இடமில்லை என்பது தான் ராமன் கருத்து.

இப்படியிருக்க, விபீஷணன் ராஜ்யத்தின் மீது மனப்பூர்வமான விருப்பத்துடன் உரிய காலத்தை நன்கு ஆராய்ந்து வந்து சேர்ந்திருக்கிறான் என்று ராமன் கூறுவதாக ஒரு செய்யுள் காணப்படுகிறது:

கருத்துற நோக்கிப்
போந்த காலமும்
நன்று; காதல்
அருத்தியும் அரசின்
மேற்றே; அறிவினுக்(கு)
அவதி இல்லை;

பெருத்துயர் தவத்தி
னானும் பிழைப்பிலன்
என்னும் பெற்றி

திருத்திய தாகும்
அன்றே, நம்வயின்
சேர்ந்த செய்கை.

[கருத்துற நோக்கி-கருத்தினால் நன்றாக நோக்கி. காதல் அருத்தியும்-மனப்பூர்வமான ஆசையும். அரசின் மேற்றே-இலங்கை அரசின் மீது உள்ளதுதான். அறிவினுக்கு அவதி இல்லை-இப்படிச் சூழ்ச்சி செய்து வந்திருக்கும் அறிவுத் திறனுக்கு ஓர் எல்லை இல்லை. பெருத்து உயர் தவத்தினானும்-பெருத்து உயர்ந்த தவத்தை உடையவனும். பிழைப்பிலன்-ஒரு பிழையும் செய்யாதவன். பெற்றி-தன்மையை. திருத்தியதாகும் அன்றே-திருத்தமாகக் காட்டுமல்லவா! நம்

வயின் சேர்ந்த செய்கை-நம்மை வந்து அடைந்திருக்கும் இந்தச் செய்கை.]

ராவணன் பிழை செய்தவன் என்பது காரணமாக விபிஷணன் அவனைத் துறந்தான் என்றால் இதற்கு முன்பே துறந்திருக்க வேண்டுமல்லவா? சீதையை ராவணன் கவர்ந்து கொண்டுபோய்ப் பல நாட்களாகியும் இப்போது தானே வந்து சேர்ந்திருக்கிறான்: காரணம் என்ன? ஏதோ கள்ளத்தனம் இருக்க வேண்டும் என்றான் சுக்கிரீவன்.

வஞ்சகனாக வந்திரா விட்டால் அஞ்சினவனாக வந்திருக்க வேண்டும். அஞ்சி வந்தவனும் கோழைத்தனத்தால் நமது காரியத்தைக் கெடுத்து விடுவான் என்றும் சுக்கிரீவன் சொன்னான்.

அண்ணனுக்கு நாசம் விளையக் கூடிய கடும்போர் நிகழ்ந்ததென்று காலம் பார்த்துக் கைவிட்டவனை நாம்தான் ஆபத்துக் காலத்தில் எப்படி நம்பியிருக்க முடியும் என்றும் சுக்கிரீவன் விவகரித்தான்.

நீலனும், 'விபிஷணன் வந்த காலத்தை ஆராய்ந்து பார்த்தாலும் நம்பக் கூடாது' என்றே சொல்லி விட்டான். இப்படிக் காலம் பார்த்து வந்தவனுடைய கருத்தெல்லாம் நம்முடைய அந்தரங்கங்களைத் தெரிந்து, நம்மை வஞ்சிப்பதாக இருக்கவேண்டும் என்பதாகவே அனுமனைத் தவிர மற்றையோர் கருதி விட்டனர்.

ஆனால் இங்கே ராமன்,

> கருத்துற நோக்கிப்
> போந்த காலமும்
> நன்று; காதல்
> அருத்தியும் அரசின்
> மேற்றே!

என்று சொல்லி, விபிஷணனுடைய ராஜ்ய ஆசையை வற்புறுத்துகிறான். வற்புறுத்தி,

> அறிவினுக்கு அவதி
> இல்லை

என்று இந்தச் சூழ்ச்சித் திறனை நல்லறிவுத் திறனாகவும் பாராட்டுகிறான்.

இது விபிஷணனுக்கும் நீதி செலுத்தவில்லை; ராமன் தனக்குத் தானே நீதி செலுத்துவதும் ஆகாது.

விபிஷணனுடைய ஒரே நோக்கம் அதர்மத்தைத் துறந்து ஸாக்ஷாத் தர்மமாகிய ராமனை அடைக்கலம் புகுவது ஒன்றே என்பது தான், கம்பனது விபிஷண சித்திரத்திற்குப் பொருத்தமாகும். 'தர்மத்தோடு சேர்ந்த பயனுடன் ராட்சஸ ராஜ்யமும் நமக்குக் கிடைக்குமே! அதற்காக இந்தச் சமயத்தைத் தப்பவிடக் கூடாது' என்று இவ்வளவு ஆலோசனையோடு விபீஷணன் வந்ததாக ராமனே கருதுவது எப்படிப் பொருந்துவதாகும்?

முன்னுக்குப் பின் முரண்

வானரத் திரளைக் கண்டு, விபீஷணன் 'இனி நான் செய்யத் தக்கது என்ன?' என்று மந்திரிமாரை வினவிய போது,

> அறம்தலை நின்றவற்(கு)
> அன்பு பூண்டனன்.
> மறந்தும்நன் புகழலால்
> வாழ்வு வேண்டலன்!

[அறம் தலை நின்றவற்கு – தருமமே முக்கியமாகக் கொண்டு நின்ற ராமனுக்கு.]

என்று தானே சொன்னான்.

'தருமமூர்த்தியிடம் தான் எனக்கு அன்பு; வேறு ஆசை கிடையாது; அரச வாழ்விலும் ஆசை கிடையாது' என்று தானே விபிஷணன் தனது நிலையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறான். இப்படி யிருந்தும் அதற்கு மாறாக விபிஷணனுக்குத் தரும ஆசையுடன் ராஜ்ய ஆசையும் இருப்பதாகக் கருதுவது சரியில்லை?

தருமமூர்த்தி மீது தான் தனக்கு அன்பு என்று விபிஷணன் சொன்னதும் அந்த மந்திரிமார், 'தரும மூர்த்தியைக் காட்சியே (காண்பதே) இனிக் கடன்' என்று பதில் சொன்னார்கள். இவர்கள் கூட விபிஷணனது ராஜ்ய ஆசை குறித்து ஒன்றும் சொல்லவில்லை.

தருமமூர்த்தியைச் சரணமடைந்தால் அவன் அறம் பொருள் இன்பம் வீடு எல்லாம் கொடுக்க வல்லவன் என்றார்கள். அருட் செல்வத்தையே நாடி அடைந்தவர்களுக்கு இறைவன் பொருட் செல்வம் முதலியவற்றையும் சேர்த்துக் கொடுப்பான் என்பது குறிப்பு.

இந்தக் குறிப்பின் புதைபொருள், தருமம் ஒன்றையே காதலித்த விபிஷணனுக்கு ராமன் அருளால் இராஜ்யமும் கிடைக்கப் போகிறது என்பதுதான்.

இப்படி முன்பின் முரண்படாது விபீஷண சித்திரத்தை உற்று நோக்குவோர், 'கருத்துற நோக்கி...' என்ற இந்தப் பாட்டைக் கம்பன் வாக்காக எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

விபீஷண சரணாகதி

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

35. தியாகக் கதைகள் ஆறு.

அனுமன் கூறியதைக் கேட்ட பின்பு முடிவுரை கூறத் தொடங்கிய ராமன், 'இந்தப் பேரறிவாளனின் சீரான உரைக்கு மேல் வேறு வகையாகச் சொல்வதற்கு என்னதான் இருக்க முடியும்!' என்று எடுத்த எடுப்பிலே கேட்கிறான்:

மற்றினி உரைப்ப(து)
என்னோ?

விபீஷணன் விஷயமாகச் சொல்ல வேண்டியதையெல்லாம் அனுமன் வடித்துச் சொல்லி விட்டானே என்கிறான். எனவே விஷயம் தெரிந்த அனுமனது ஆராய்ச்சிக்கு மேல் விபீஷணனைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் என்ன?

அடைக்கலம் குறித்த கொள்கை

இந்தப் பீடிகையுடன் வேறொரு வகையிலும் தன் சொந்தக் கொள்கை ஒன்றை வெளியிடுகிறான். அதாவது, சரணாகதி செய்பவர்களைக் கை விடுவதில்லை என்ற தனிப் பெருங் கொள்கையைத் தான்.

மற்றினி உரைப்ப(து)
என்னோ? மாருதி
வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி;
அன்ன(து) அன்றெனில்,
பிறிதொன் றாலும்
வெற்றியே பெறுக,
தோற்க, வீக, வீ –
யாது வாழ்க;
பற்றுதல் அன்றி
உண்டோ அடைக்கலம்
பகர்கின் றானை?

[என்னோ – எதற்காக. மாருதி – அனுமன். பெற்றி – வகை. அன்னது – அவன் சொன்னது. அன்றெனில் – தகுதியற்றதென்று நீங்கள் இன்னும் கருதுவீர்களானால். பிறிதொன்றானாலும்– வேறொரு வகையினால்: வீக – இறந்தாலும் சரி. வீயாது வாழ்க – இறவாமல் பெருவாழ்வு பெறுவதாயிருந்தாலும் சரி. பகர்கின்றானை – சொல்லுகிற இந்த விபீஷணனை.]

அபயதானத்தைப் பற்றிய தன் கொள்கையை விவரிக்கிறான் ராமன். 'நமக்கு வெகு நாளைப் பழக்கமில்லாத புதியவன் இவன்; இன்றைக்குத்தானே வந்திருக்கிறான்' என்று சரணமடைந்தவனைத் தள்ளி விடுவதற்கில்லையாம். 'மகா பாதகன்' என்று கூட விட்டு விடுவதற்கு இடமில்லையாம் சரணாகதி தர்மத்திலே.

எந்தப் பாதகனும் மனம் திருந்தி உய்ந்துபோக வழியிருக்கிறதாம். ஏன், இப்பிறவியிலேயே மாறிப்பிறந்து உய்ந்து போகவும் இடமிருக்கிறதாம்.

சிபியும் புறாவும்

சரணாகத ரட்சணம் குறித்துப் பேசும் போதே தன் குலத்து முன்னோனாகிய சிபிச் சக்கரவர்த்தியின் நினைவு வருகிறது ராமனுக்கு. 'சிபி' என்றதுமே 'சரணமடைந்த புறாவைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் உயிரையே தருமாறு தராசுத் தட்டில் ஏறிய' அந்தச் சக்கரவர்த்தியின் நினைவு நமது நாட்டுச் சிறுவர்களுக்கும் வருவதுண்டு.

இந்தக் கதை பாட்டிமார் வாயிலாகவும் பௌராணிகர் வாயிலாகவும் பிரசித்தி பெற்றிருக்கும் ஒரு சிரஞ்சீவிக் கதை—ஒரு நவயௌவன சௌந்தரியக் கதை. ஒரு தரம் கேட்டதும் என்றும் மறக்க முடியாத கதை.

அழகான சிறு புரு ஒன்றைத் துரத்திக்கொண்டு வருகிறது ஒரு பெரிய முரட்டுப் பருந்து. புரு பறந்தோடி வந்து சிபியைச் சரணமடைந்து விடுகிறது. இவனும் அபயம் அளித்து விடுகிறான்.

ஆனால் பின்னே வந்த பருந்தும் 'ஜீவ காருண்யமூர்த்தியே! என் இரையைக் கொடுத்து விடு' என்றுதான் கேட்கிறது.

'இதை யன்றி வேறு இரை கொடுப்பேன்.'

'அப்படியானால் அந்தப் புருவின் எடையளவு தசையை உன் உடம்பிலிருந்து அரிந்து கொடு, சக்கரவர்த்தியே!'

சக்கரவர்த்தியும் சம்மதித்தான். தாராளமாகவே தசையை அறுத்து வைத்தான். எனினும் எடை குறைந்தது.



உறுப்புக்களை ஒவ்வொன்றாக அறுத்து வைக்கத் தொடங்கினான். எடை நிறைந்தபாடில்லை.

உடனே தியாகமூர்த்தி தானே தட்டில் ஏறி நின்று எடையை நிறைத்து விடுகிறான். தேவர்கள் பிரத்தியட்சமாகி அந்தத் தியாகத்தை மிகவும் கொண்டாடுகிறார்கள், யமனும் தேவேந்திரனும் தான் முறையே புருவாகவும் பருந்தாகவும் வடிவமெடுத்துச் சோதிக்க வந்திருந்தார்களாம்.

இந்தக் கதை பொதுமக்கள் உள்ளம் புகுந்து உயிர் பெற்று மேலும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. தன் உடம்பின் வலது புறத்திலிருந்து தசையை அரிந்து அரிந்து தராசில் வைத்துக் கொண்டிருந்தானாம் சிபி. அப்போது கண்ணீர் வந்துவிட்டது — ஒரு கண்ணிலே.

பருந்து சொல்லுகிறது:

'நீ அழுகிறாய்; உன் தசை வேண்டாம்!'

சக்கரவர்த்தி பதில் சொல்லுகிறான்: 'இடது கண்ணல்லவா கண்ணீர் வடிக்கிறது!—உடம்பின் வலது பக்கம் பெற்ற பாக்கியத்தை இந்த இடது பக்கம் பெறவில்லையே என்றல்லவா அழுகிறது!'

இந்த அதிசயத் தியாகப் போட்டிக்கு முன், பருந்தும் பசியை மறந்து தெய்வமாகப் பரிணமித்து விடுகிறது. அருள் முடி சூடி ஆண்ட மானுட மன்னனுக்குத் தேவராஜாவும் பணிந்து விடுகிறான்.

தியாக வாழ்வு வாழ்ந்து இந்த உலகத்திலேயே 'வானுறையும் தெய்வ'மாகக் காட்சி வழங்கிய சிபிச் சக்கரவர்த்தியின் கதையை ராமன் இளமையிலேயே கேட்டிருக்கிறான். அறிவு பிறந்த நாள் தொடங்கி அறிந்து கொண்டிருக்கும் கதைதானே இது!

பிறந்தநாள் தொடங்கி
யாரும், துலைபுக்க
பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ?

[துலை புக்க – தராசில் ஏறிய, பெற்றி – (இங்கே) சிறப்பான வரலாறு.]

பிறந்த குழந்தையைத் தூளித் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் போதும் கோசல நாட்டிலே சிபிச்சக்கரவர்த்தியின் கதைப்பாட்டையே தாலாட்டுப் பாட்டாகப் பாடுவார்கள் என்பது குறிப்பு. இவ்விதமாகத் தொடங்குகிறதாம் குழந்தைக் கல்வி ராமராஜ்யத்திலே.

எனவே அடைக்கலமாக வந்தடையும் விபீஷணனை 'என் உயிருக்கு ஆபத்து வருமோ என்று கை விடுவது எப்படி!' என்கிறான் ராமன்:

'பிறந்தநாள் தொடங்கி
யாரும் துலைபுக்க
பெரியோன் பெற்றி

மறந்தநாள் உண்டோ?
என்னைச் சரண்என
வாழ்கின் றானைத்

துறந்தநாட்(கு) இன்று
வந்து துன்னினான்
சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்றே
என்றும் இருந்தநாள்
ஆவ(து)?' என்றான்.

[சரண் என வாழ்கின்றானை - சரணமாக வந்தடைந்து வாழ்வு பெற இருக்கிற விபீஷணனை. துறந்த நாட்கு - கைவிடுகிற நாளைக் காட்டிலும். துன்னினான் சூழ்ச்சியாலே — சேர்ந்தவனாகிய இந்த விபீஷணனுடைய தந்திரத்தாலே.]

விபீஷணன் வஞ்சனையாகக் கொன்றுவிடக் கூடுமோ என்ற கருத்துடன் தானே விபீஷணனை அங்கீகரிக்க வேண்டாமென்றீர்கள்! ராமனோ, பானம் செய்த கதையையும் அதன் பொருளையும் சுட்டிக் காட்டுகிறான் :

இடைந்தவர்க்(கு), அபயம்
யாம்என்(று) இரந்தவர்க்(கு),
எறிநீர் வேலை

கடைந்தவர்க்கு ஆகி
ஆலம் உண்டவற்
கண்டி லீரோ ?



இறந்தநாள் அன்றே
என்றும் இருந்தநாள்
ஆவது?

என்கிறான். உயிர்த் தியாகமே வாழ்வு என்கிறான்.

சிவ கதைகளும் ஹரி கதைகளும்

சிபிச் சக்கரவர்த்தியின் கதையைக் குறிப்பிட்டவன், சிவபெருமான் விஷ

உடைந்தவர்க்(கு) உதவான்
ஆயின், உள்ளதொன்(று)
ஈயான் ஆயின்,
அடைந்தவர்க்(கு) அருளான்
ஆயின், அறம்என்னும்?
ஆண்மை என்னும்?

[இடைந்தவர்க்கு-அஞ்சினவர்களுக்கு. அபயம் யாம் என்று - நாங்கள் அபயம் என்று; அதாவது, நாங்கள் பயமில்லா

மல் பாதுகாக்க வேண்டிய பொருளா வோம் என்று சொல்லி. இரந்தவர்க்கு — யாசித்தவர்களுக்கு. எறிநீர் வேலை — அலையெறிகின்ற பாற்கடல். ஆலம்—ஆல கால விஷம் என்ற ஹாலாஹல விஷம். உண்டவற் கன்றிலீரோ — உட்கொண்ட சிவபெருமானைப்பற்றி அறிந்து கொள்ள வில்லையா. உடைந்தவர்க்கு — மனம் உடைந்தவர்களுக்கு. என்னாம் — என்ன பயன்படும்.]

இன்னான் இனியான் என்று பாராது அடைக்கலம் அடைந்தவரை உயிரைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்ப தற்குச் சிபியின் கதையைச் சொல்லி விட்டு, சிவபெருமானுடைய திருநீல கண்டமும் இத்தகைய தியாகத்திற்கே சாட்சி என்கிறான் ராமன்.

இந்தச் சிவகதையுடன் மார்க்கண்டேய னுக்குச் சிவபெருமான் அபயதானம் செய்த சிரஞ்சீவிக் கதையையும் நினை வூட்டுகிறான் ராமன். இந்தச் சிவ கதை களைப்போல் ஹரிகதையாகிய கஜேந்திர மோட்சக் கதையையும் பயன்படுத்திக் கொள்கிறான்.

மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்த காலகாலன் கதை 'நமனை அஞ்சோம்' என்ற அடியார்களின் மன நிலைக்கு ஒரு பேரரண். கஜேந்திர மோட்சமோ இறைவன் கருணை இன் னும் இறங்கி வந்து யானைக்கும் அருள் செய்ததைக் காட்டுகிறது.

எட்டாத பரம்பொருள் எப்படியோ வெளி வந்து, எங்கேயோ ஒரு காட்டுப் பொய்கையில் முதலையிடம் அகப்பட்டுக் கொண்ட யானைக்காக 'அரை குலையத் தலை குலைய' ஓடி வந்ததாம். இந்தப் புராண கதை எவ்வளவு காலமாக எத் தனை பக்தருள்ளங்களை வசீகரித்திருக் கிறது!

இக் கதையை ராமன் பின் வருமாறு குறிப்பிடுகிறான்:

போதகம் ஒன்று
 கன்றி இடங்கர்மாப்
 பொருத போரின்
ஆதியம் பரமே
 யான்உன் அபயம்என்(று)
 அழைத்த அந்நாள்
வேதமும் முடிவும்
 காணா மெய்ப்பொருள்
 வெளிவந்(து) எய்தி
மாதுயர் துடைத்த
 வார்த்தை மறப்பரோ
 மறப்பி லாதார்?

[போதகம் — யானை. கன்றி — கோபங் கொண்டு. இடங்கர்மா — முதலையாகிய பிராணி.]

புறவின் தியாகம்

ஒரு புறவின் தியாகக் கதையையும் சொல்லுகிறான்:

பேடையைப் பிடித்துத்
 தன்னைப் பிடிக்கவந்(து)
 அடைந்த பேதை
வேடனுக்(கு) உதவி
 செய்வான், விறகிடை
 வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை
 நோக்கித் தன்னுடல்
 கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த
 வார்த்தை வேதத்தின்
 விழுமி தன்றோ?

ஆணும் பெண்ணுமாக இரண்டு புறாக் கள் பரஸ்பர அன்புடன் வசித்து வந் தன ஒரு மரத்திலே. அங்கு வந்த வேடன் கண்ணி வைத்து இப் புறாக்களில் ஒன்றைப் பிடித்து விட்டான். ஆண் புறாவையும் பிடிக்க முயன்றான்.

திடீரென்று வானத்திலே மேகங்கள் திரண்டு அந்த வன மெங்கும் இருட்டாகி விடுகிறது. குளிர்ந்த காற்று 'சுரீர்' என்று எலும்பையும் தொளைப்பது போல் வீசுகிறது. பசியும் சிறு குடலைப் பெருங்குடல் தின்று விடுவது போல் கஷ்டப்படுத்துகிறது.

மின் வெட்டிலே பேதை வேடனது பரிதாப நிலை—அந்த நடுக்கமும் பசியும்— ஆண் புறாவுக்குத் தெரிந்து விடுகிறதாம். உடனே அந்தப் புறா பறந்து போய்க் காட்டுத் தீ எரிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து கொள்ளி ஒன்றை எடுத்து வந்து சருகு மீது போடுகிறது!

தீயில் வேடன் குளிர் காய்கிறான். பசி போகவில்லையே! நெருப்பிலே அந்த ஆண் புறா விழுந்து விடுகிறதாம்,— பேடையைப் பிடித்தவன் தன்னையும் சேர்த்துப் பசி தீர்த்துக் கொள்ளட்டு மென்று!

குலத்து முன்னோனாகிய சிபியின் கதையிலிருந்து பேச்சைத் தொடங்கிய வன், 'சமுகுப் பெரியப்பா'வின் கதை யுடன் முடிக்கப் போகிறான்.

விபீஷண சரணாகதி

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

36. ‘அருள் செய்தானோ ?’

‘சரண்’ என்று ஒரு கூக்குரல் திடீரென்று கேட்கிறது காட்டிலே. ஜடாயு கவனிக்கிறான். ‘சரண் எனக்கு யாரோ!’ என்ற அந்தப் புலம்பல் — அந்த அழுகைக் குரல்—காதில் விழுகிறது.

ஜடாயு நாடகம்

ஜானகியின் குரலென்று ஜடாயுவுக்குத் தெரியாது. அது ஒரு பெண் குரல் என்பது மட்டுமே தெரிகிறது. ‘சரண் எனக்கு யாரோ!’ என்ற அந்தக் குரலுக்குப் பதில் கொடுக்கிறான் ஜடாயு, ‘அரண் உனக்கு ஆவேன், பெண்ணே! பயப்படாதே’ என்பதாக.

சீதை என்று தெரியாமலிருந்தும், இயற்கையாக எழுந்த ஜீவகாருணியத்தால் ‘யாவர்க்காயினும், எளியவர்க்காயினும்’ சாகப் பெறுவதே பேறு என்ற தியாக உணர்வுடன் பறந்து போகிறான் ஜடாயு, முரட்டுக் கொடியவனாகிய ராவணனை நோக்கி.

அந்தப் போரில் ஜடாயு செய்த உயிர்த் தியாகத்தைத் ‘தெய்வ மரணம்’ என்று சிறப்பித்துப் பேசுகிறான் ராமன். ஆம்; இப்போது நடைபெறுகிறது ஜடாயு நாடகம் ராமனுள்ளத்திலே.

தெய்வ வாழ்க்கையின் சிறப்பைக் குறித்துத் திருவள்ளுவர் பேசியிருக்கிறார். உலகத்தில் வாழ வேண்டிய முறை தெரிந்து வாழ்பவன் இம்மண்ணுலகத்தில் வாழ்ந்த போதிலும் ‘வானுறையும் தெய்வ’த்துள் ஒருவனாக வைக்கப்படுகிறான் என்கிறது தமிழர் பொது மறை. இந்த ‘வானுறையும் தெய்வம்’ வாழ்வது தெய்வ வாழ்க்கை. ‘வானுறையும் தெய்வ’த்தின் தியாக மரணத்தைத் ‘தெய்வ மரணம்’ என்றே குறிப்பிடத் துணிகிறது கம்பன் மேதை.

ஆனால் தெய்வத்திற்கு மரணம் உண்டா! தேவர்கள் அமரர்களல்லவா!

ஒரு கவிச் சக்கரவர்த்தியின் சமாதியைப் பார்த்தான் முடிமன்னன் ஒருவன். ‘நான் சக்கரவர்த்தியாக என் பொற் சிங்காதனத்தில் கொலுவிருப்பதைக் காட்டிலும் இந்தச் சமாதிக்குள் இருப்பதையே பெரு வாழ்வாகக் கருதுவேன்!’ என்று மனமுருகிக் கூறினானாம்.

அப்படியே தேவர்களும் ஜடாயு மரணத்தைப் பார்த்ததும், ‘எங்கள் அமர வாழ்வினால் என்ன பயன்! ஜடாயுவைப் போல் உயிர்த் தியாகம் செய்ய முடியவில்லையே!’ என்று பெருமூச்சு விட்டார்களாம். (கண்ணைத்தான் இமைக்க முடியவில்லை; உயிரைத்தான் விட முடியவில்லை; மூச்சையாவது விட முடிகிறதே!)

அப்படித் தெய்வமும் ஆசைப்படுகின்ற மரணமாம் ஜடாயுவின் (தெய்வ) மரணம்.

இது குறித்து ராமன் வாக்காக அமைந்திருக்கும் அந்தப் பாட்டு முழுமையும்—அந்தக் கவிதா ரூபத்தின் சௌந்தரியம் முழுமையும்—இப்போது நோக்குவோம்:

‘சரண்எனக்(கு) யார்கொல்?’
  என்று சானகி
  அழுது சாம்ப,
‘அரண்உனக்(கு) ஆவன்
  வஞ்சி! அஞ்சல்’ என்(று)
  அருளின் எய்தி,
முரணுடைக் கொடியோன்
  கொல்ல மொய்யமர்
  முடித்துத் தெய்வ
மரணம்என் தாதை
  பெற்ற(து) என்வயின்
  வழக்கன் றோமோ?

[சரண் எனக்கு யார் கொல்-என்னை ரட்சிப்பவர் யார்தான். சாம்ப-வாட,

அரண் – கோட்டை மதில். வஞ்சி – பெண்ணே. அஞ்சல் – பயப்படாதே. முரணுடைக் கொடியோன் – முரட்டுக் குணமுள்ள கொடியவனான ராவணன். மோய் அமர் – நெருங்கிய பெரும் போர். என் தாதை–என் தந்தை முறை யான ஜடாயு. என்வயின் வழக்கன் றுமோ–எனக்கு முறையான செய்கையா காமல் போய்விடுமோ.]

'சரண் எனக்கு யார் கொல்!' என்று ஜானகி அழுததும், 'அரண் உனக்கு ஆவன் வஞ்சி! அஞ்சல்' என்று சொல்லிக் கொண்டே ஜடாயு ஜீவகாருணியம் பொங்கச் சென்றான் என்ற இந்த விவரங் கள் ஆரணிய காண்டத்திலே 'சடாயு உயிர்நீத்த படல'த்தில் காணப்பட வில்லை. இவ் விவரங்களை ஜடாயு தன் னிடம் தெரிவித்த குறிப்புக்களிலிருந்து ராமன் ஊகித்துக் கொண்டானென்று கருதலாம்.

ஜடாயுவைக் காண்பதற்கு முன்பே, தண்டக வனத்து முனிவர்களிடத்தி லேயே ராமன், தியாக மரணம் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கிறான் :


ஆவுக் காயினும்,
அந்தணர்க் காயினும்
யாவர்க் கேனும்,
எளியவர்க் காயினும்,
சாவப் பெற்றவ
ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழும்
தேவர்கள் ஆகுவார்.

அங்கேயே 'தெய்வ மரண'க் குறிப்பி னைக் காண்கிறோம். ஆனால் அந்தக் கொள்கை, ஜடாயுவின் தியாக மரணம் கண்டதும் மலர்ச்சி பெறுகிறது என்று ஊகிக்கலாம்.

தந்தையின் செல்வத்திற்கு உரிமை கொண்டாடுவது போல் கழுகுப் பெரி யப்பாவின் தெய்வ மரணத்திலும் தனக்கு உரிமை உண்டென்று ராமன் வழக்காடுவது போலத் தோன்றுகிறது. ஜடாயுவும் தசரத சக்கரவர்த்தியும் உயிர்த் தோழர்கள் என்பதும், ராம லட்சுமணரை ஜடாயு தன் புதல்வர் களைப் போல் பாவித்து அன்பு பாராட்டி னான் என்பதும், தசர தனைக் காட்டிலும் ஜடாயு வயது முதிர்ந் தவன் என்பதும் இங்கே வாசகர்கள் நினைவூட்டிக் கொள்ள வேண்டிய விஷயங் கள்.



'சீதைக்கு அபயம் தந்து உயிரைக் கொடுத்தாரே பெரியப்பா! விபீஷணனுக்கு அபயம் தருவது என் உயிருக்கு ஆபத்து விளைப்பதானால், அதுவும் தெய்வ மரணம் தானே!' என்கிறான் ராமன், தன் பேச்சின் இறுதிப் பகுதியில்.



தன் குலத்து முன்னோனாகிய சிபிச் சக்ரவர்த்தியின் அந்தத் தியாக பரம்பரை ஜடாயு வரை வந்திருக்கிறதென்று கூறி, 'அந்தப் பரம்பரையில் வந்தவன் நான்!' என்கிறான் சக்கரவர்த்தித் திருமகன்.

'அடியார்க்கு அடியேன்' என்று பக்தர்கள் பணிவுச் செருக்குடன் பேசுவதுபோல் பேசுகிறான் ராமனும் தியாக கர்வத்துடன்!

இதற்கு மேல் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது!

'ஆதலான் அபயம்
என்ற பொழுதத்தே
அபய தானம்
ஈதலே கடப்பா(டு)
என்ப(து); இயம்பினீர்
என்பால் வைத்த
காதலான்; இனிவே(று)
எண்ணக் கடவதென்?
கதிரோன் மைந்த!
கோதிலா தவனை
நீயே என்வயின்
கொணர்தி' என்றான்.

[ஆதலான் – ஆதலால். அபயம் என்ற பொழுதத்தே – ஒருவன் அபயம் என்று என்னை வந்தடைந்த பொழுதே. கடப்பாடு – கடமை. இயம்பினீர் – சொன்னீர்கள். என்பால் வைத்த காதலான்–என்னிடம் வைத்திருக்கும் காதலால். எண்ணக் கடவது என்–எண்ணவேண்டியது என்ன இருக்கிறது. கதிரோன் மைந்த – சூரிய புத்திரனான சுக்ரீவனே. கோதிலாதவனை–ஒரு குற்றமும் இல்லாத விபீஷணனை. என்வயின் கொணர்தி – என்னிடம் அழைத்து வருவாய்.]

சுக்கிரீவனும் விபீஷணனும்

முதன் முதல் விபீஷணனை அங்கீகரிக்க வேண்டாமென்று சொன்ன சுக்கிரீவனே விபீஷணனைத் தன்னிடம் அழைத்து வர வேண்டும் என்று ராமன் தீர்மானிக்கிறான். இது 'ராஜதந்திரம்' மட்டுமன்று; அநுமன் சொன்னதையும் தான் சொன்னதையும் கவனித்துக் கேட்ட பின்பு சுக்கிரீவனும் விபீஷணனை அங்கீகரிப்பதில் உடன்படுவான் என்ற நம்பிக்கையும் தான்.

ராமன் விபீஷணனைக் 'கோதிலாதவன்' என்று குறிப்பிடுகிறான். இப்போது மனத்தெளிவு பெற்ற சுக்கிரீவன் விபீஷணனை நோக்கி விரைந்து செல்லும் போது, அந்த விபீஷணனை 'மெய்யினுக்கு உறையுளான' ஒருவன் என்று கவிஞன் குறிப்பிடுகிறான்.

சுக்கிரீவன் விரைந்து செல்வதும், 'ராமன் என் விஷயமாக எப்படி முடிவு கட்டப் போகிறானோ!' என்று அலைபாயும் உள்ளத்துடன் விபீஷணன் சுக்கிரீவன் எதிரில் வருவதும்,

மெய்யினுக்(கு) உறையு
ளான ஒருவன்பால்
விரைவிற் சென்முன்

என்றும்,

திரிகின்ற உள்ளத்
தானும் அகமலர்ந்(து)
அவன்முன் சென்ருன்

என்றும் கூறப்படுகின்றன.

இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொள்கிருர்கள் :

தொல்பெருங் காலம்
எல்லாம் பழகினும்
தூயர் அல்லார்
புல்லலர் உள்ளம்;
தூயார் பொருந்துவர்
எதிர்ந்த ஞான்றே ;
ஒல்லைவந்(து) உணர்வும்
ஒன்ற, இருவரும்
ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும்
போலத் தழுவினர்
எழுவின் தோளார்.

[தொல் பெருங்காலம் எல்லாம் - பழைய நீண்ட காலமெல்லாம். புல்லலர் உள்ளம்-மனம் பொருந்தார். எதிர்ந்த ஞான்றே - எதிரில் பார்த்த போதே. ஒல்லை-விரைவில். ஒன்ற - ஒருசேரக் கலக்க. ஒரு நாள் உற்ற எல்லியும் பகலும் போல-ஒரே நாளில் பொருந்தியிருக்கிற இரவும் பகலும் போல. எழுவின் தோளார்-இரும்புத் தூண் போன்ற தோள்களை உடையவர்கள்.]

இந்தக் கணம் முதல் சுக்கிரீவனும் விபீஷணனும் நண்பராகி விடுகிருர்களாம். இருவரும் உள்ளத் தூய்மை வாய்ந்தவர்கள்; 'கண்டதும் காதல்' என்ற முறையில் நட்புக் காதலராகி விடுகின்றனராம். விபீஷணனை நேரில் பார்ப்பதற்கு முன்புதான் சுக்கிரீவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பு.

கருநிறமுள்ள விபீஷணனும் வெள்ளை வானரமாகிய சுக்கிரீவனும் தழுவிக் கொண்டதற்கு ஒரே தினத்தில் கலந்து கொள்ளும் இரவு பகல்களை உவமை கூறுகிருன் கவிஞன். இருவர் குண சித்திரங்களிலுமுள்ள முரண்பாடுகளும் ஒருவேளை இங்கே புதை பொருளாகக் குறிக்கப்பட்டிருக்கலாமோ! ஆனல் அது குறித்து இங்கே இப்போது ஆராய வேண்டிய அவசியம் இல்லை. சுக்கிரீவன் தன்னைத் தழுவிக் கொண்டதிலிருந்தே ராமன் தன்னை அடைக்கலமாக ஒப்புக் கொண்டு விட்டான் என்பதை மேதாவியான விபீஷணன் ஒருவாறு ஊகித்துக் கொண்டிருக்கலாம். எனினும் அது குறித்துச் சுக்கிரீவன் என்ன சொல்லப் போகிருன் என்பதை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறது விபீஷணனுள்ளம்.

இந்த நிலையின் சுக்கிரீவன் பேசுகிருன்:


தழுவினர் நின்ற
காலை, 'தாமரைக்
கண்ணன் தங்கள்
முழுமுதற் குலத்திற்(கு)
ஏற்ற முறைமையால்,
உவகை மூள
வழுவலில் அபயம்
உன்பால் வழங்கினன்;
அவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவின்'
என்னக் கதிரவன்
சிறுவன் சொன்னுன்.

[நின்ற காலை — நின்றபோது. தாமரைக் கண்ணன்—ராமன். வழுவலில் அபயம் — தவறுதல் இல்லாத அபய தானத்தை. தொழுதி—வணங்குவாய். என்ன— என்று. கதிரவன் சிறுவன்—சுக்கிரீவன்.]

'தங்கள் முழு முதற் குலத்திற்கு ஏற்ற முறைமையால்......அபயம் உன்பால் வழங்கினன்' என்று சுக்கிரீவன் கூறுவதிலிருந்து, ராமன் பேச்சைச் சுக்கிரீவன் எவ்வளவு கவனமாய்க் கேட்டான் என்பதும், சிபியைக் குறித்தும் ஜடாயுவைக் குறித்தும் ராமன் சொன்னதை மிக மிகக் கவனமாய்க் கேட்டான் என்பதும் ஊகிக்கப் படும்.

சிபிச் சக்கரவர்த்தியின் தியாகத்தைக் கேட்டதும் ராமகுலம் 'முதற்குலம்' என்று கருதி யிருக்க வேண்டும். அந்தத் தியாகத்தை ஜடாயுவரை நீள விட்டுக் காட்டி, அந்த ஜடாயுவை 'என் தாதை' என்று ராமன் பெருமை பேசியதும், 'இந்த ராமகுலமன்ரே முழு முதற் குலம்!' என்று சுக்கிரீவன் புரிந்துப் போயிருக்க வேண்டும்.

சுக்கிரீவன் பேசியதைக் கண்ணீர் பெருகக் கேட்டுக் கொண்டிருக்கிருன் விபீஷணன். ஒன்றும் பதில் சொல்லவில்லை.



•37. திருத்திய நல்லறிவும் தெய்விக மெய்யறிவும்

ராமன் தேவியை வஞ்சித்துக் கவர்ந்து வந்ததை ராவணன் தம்பியரான விபீஷணனும் கும்பகர்ணனும் ஒருங்கே கண்டித்தார்கள். அது வீரதர்மத்திற்கு — அதாவது, சுத்த வீரன் என்ற நிலையுடன் — முரண்படுவதாகும் என்பது கும்பகர்ணன் கருத்து. 'தருமமே வீரம்' என்னும் கொள்கையுள்ள விபீஷணனுக்கோ, 'தேவியைப் பிரித்த பாவி வஞ்சன்' செய்த அந்தப் பெரும் பாதகச் செயல் அவனைச் சமுதாயத்திற்கு விஷமாக்கியதுடன், அவனுடன் உறவு கொண்டாடியவர்களையும் விஷம் போலச் செய்து விடுகிறது!

மந்திராலோசனை மன்றத்திலே, சீதையைக் கவர்ந்தது வீரச் சிறுமையோடு குலச் சிறுமையுமாகு மென்று கூறிய கும்பகர்ணன், 'ஆதலால் சீதையை இப்போதாவது விட்டு விடு' என்று சொல்லிவிடவில்லை. 'சீதையை இப்போது விட்டுவோமென்றால், நம்மை அலட்சியம் செய்வார்கள்; ஏளனம் செய்வார்கள். எனவே வெற்றியோ தோல்வியோ, போர் புரிந்து பார்ப்போம்' என்றுதான் வற்புறுத்துகிறான். சீதையைச் சிறை வைத்தது அடாத செயலேயாயினும். இப்போது செய்யத் தக்கது போர்தான், சீதையை விடுவதல்ல என்ற இந்தக் கும்பகர்ணன் கருத்து விபீஷணன் கொள்கையுடன் எப்படி மாறுபட்டிருக்கிறது பாருங்கள்!

இத்தகைய குலப் பெருமை வஞ்சப் படுகுழியில் ஒன்று என்பது விபீஷணன் கொள்கை. தேவியைப் பிரித்த பாவச் செயலை, வஞ்சனைக் குணத்தை, பெரும் பாதகமென்று தைரியமாக ஒப்புக்கொண்டு சீதையை விட்டுவிடுவதே வீரமும் வெற்றியுமாகும் என்பதல்லவா விபீஷணன் கொள்கை!

இக் கொள்கையை விபீஷணன் வாயிலாகக் கேட்ட பின்பு கும்பகர்ணனும் இது குறித்து மீண்டும் ஆலோசனை செய்திருக்க வேண்டும். ஆலோசித்துக் கொண்டே உறங்கப் போயிருக்கவேண்டும். இந்த உறக்கத்தினிடையே ராவணன் ஆணையால் கும்பகர்ணனை எழுப்பி விடுகிறார்கள். அப்போது விபீஷணன் கருத்தை ஒட்டித் தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு, 'சீதையை இன்னும் விட்டு விடவில்லையா?' என்று ஆத்திரமாய்த் தமையனைக் கேட்கிறான் கும்பகர்ணன்.

இந்த விதமாகக் கும்பகர்ணனை வசீகரிக்கக்கூடிய ஞானத் தெளிவு வாய்ந்த விபீஷணன், ராமன் தனக்கும் அபயம் அளிப்பானோ என்று அலைபாயும் உள்ளத்துடனேயே ராமனது மந்திராலோசனை மன்றத்தின் முடிவுக்காகக் காத்திருக்கிறான்.

ராமன் அங்கீகரித்ததை அறிந்து கொண்டதும்,

> தஞ்செனக் கருதி
> னானோ? தாழ்சடைக்
> கடவுள் உண்ட
>
> நஞ்செனத் தகைய
> னன்றோ நாயகன்
> அருளி னாயேன்?

[தஞ்சென — தஞ்சம் என; அகடக் கலப் பொருள் என்று. தாழ்சடைக் கடவுள் – தொங்குகிற சடையை உடைய சிவபெருமான். நஞ்சு எனத் தகையன் அன்றோ—நஞ்சுபோல் தகுதியை அடைந்தேனல்லவா. நாயகன் அருளின் – தலைவனை ராமபிரானது அருளினால். நாயேன்— நாய்போல் கடைப்பட்ட நானும்.]

என்று விபீஷணன் அதிசயமாகக் கொண்டாடுகிறான் அந்த அருளையும் அபயதானத்தையும்.

'ராவணனுடன் பிறந்த நானும் விஷம் தான்! ஆனால் சிவபெருமானது திருநீல

கண்டத்தில் இடம் பெற்று அந்த விஷமும் சிறப்படைந்தது போல் நானும் உயர்வு பெற்று விட்டேன்' என்ற இந்த மனநிலை விபீஷணனை ஒத்த மகான்களுக்கே உரியது.]

ராமபிரானது அருள் - வலிமையை மேலும் நினைத்துப் பார்க்கிறான் விபீஷணன் :

மருளுறு மனத்தி
னான்என் வாய்மொழி
மறுத்தான் ; வானத்(து)

உருளுறு தேரி
னானும் இலங்கைமீ(து)
ஓடும் அன்றோ ?

தெருளுறு சிந்தை
வந்த தேற்றம்
ஈதாகின், செய்யும்

அருளிது வாயின்,
கெட்டேன் ! பிழைப்பரோ
அரக்க ரானோர் ?

[மருளுறு - மயக்கம் நிரம்பிய. மனத்தினான் - மனத்தை உடைய ராவணன். வானத்து உருளுறு தேரினானும் - வான வழியில் உருண்டு போகும் தன்மையுள்ள தேரையுடைய சூரியனும். இலங்கைமீது ஓடும் அன்றோ - இலங்கைக்கு நேர் மேலே ராவண பயம் இல்லாமல் ஓடுவான் அல்லவா. தெருளுறு - தெளிவு மிக்க. சிந்தை வந்த தேற்றம் - சிந்தையில் உண்டான திடமான எண்ணம். ஈது ஆகின் - இதுவேயானால். கெட்டேன் - அதிசயமாகச் சொல்லும் வார்த்தை.]

ராமனுடைய தர்ம வீரம், சத்திய வீரம் எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும், இப்படி அருள் செய்கின்ற அறிவுத் தெளிவும் திடசித்தமும் போதுமே அரக்கர்களை ராமன் வென்றொழிப்பதற்கு! இது விபீஷணன் மனநிலை.

ராம பாணத்திற்கு முன் 'பிழைப்பரோ அரக்கர் !' என்று யாரும் சொல்லக் கூடும்.

அருள்இது ஆயின்,
கெட்டேன் பிழைப்பரோ
அரக்க ரானோர் ?

என்று சொல்வது ஒரு விபீஷணனுக்குத் தான் எளிதாகும்.

ராமனுடைய வலிமைக்கு அஞ்சுவதைக் காட்டிலும் இந்த அருளுக்கு அஞ்ச வேண்டியதுதான் அரக்கர் கொடுமையெல்லாம் !

'இந்த அருளுக்கு முன் அரக்கரானோர் பிழைத்திருக்க முடியாது !' என்ற சொல்லமைப்பு நன்கு நோக்கத் தக்கது. இந்த அருளுக்கு அரக்கர்கள் பணிந்து விட்டாலும், அவர்கள் அரக்கர்களாகப் பிழைத்திருக்க முடியாதல்லவா ! அவர்களும் விபீஷணனைப் போல் அரக்கர் குலத்தைத் துறந்து விடுவார்களே !

ராமனுடைய அருள் விபீஷணனுக்குத் தானா உரியது ! ராவணாதி ராட்சஸர் அனைவருக்கும் உரியதுதான். ஆனால் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்போவதில்லையே !

இப்படித் தனக்கு இன்னல் செய்வோருக்கும் இரங்கி உதவக்கூடிய பேரருளைக் குறித்து மேலும் தியானிக்கிறது விபீஷணனுள்ளம். கடல் கடைந்த கதை நினைவிற்கு வருகிறது.

ஏற்கெனவே சிவபெருமான் உண்ட விஷத்தை நினைத்துப் பார்த்தபோதும்



இந்தக் கதை நினைவுக்கு வந்தது. இப்போது அதே கடல் அமுதம் அளித்தது நினைவிற்கு வருகிறது :

தீர்வரும் இன்னல்
தம்மைச் செய்யினும்,
செய்ய சிந்தைப்

பேரரு ளாளர்
தத்தம் செய்கையிற்
பிழைப்ப துண்டோ ?

கார்வரை நிறுவித்
தன்னைக் கனல்எழக்
கலக்கக் கண்டும்,

ஆர்கலி அமரர்
உய்ய அமிழ்துபண்(டு)
அளித்த தன்றே?

[தீர்வரும் இன்னல்தம்மை - நீக்க முடியாத துன்பங்களை. செய்ய சிந்தை -



செம்மையான சிந்தையை உடைய. பிழைப்பதுண்டோ - தவறுவதுண்டோ. கார்வரை - கருநிறமுள்ள மலை; (இங்கே) மந்தர மலை. ஆர்கலி - சமுத்திரம். அமரர் உய்ய - தேவர்கள் பிழைத்திருக்கும்படி. பண்டு - முற்காலத்தில்.]

'தேவியைப் பிரித்த பாவியின் தம்பி தானே!' என்று தள்ளி விடாமல் தன்னையும் பொறுத்து அருள் செய்யப் போகிறானே என்பது மட்டுமல்ல கியானத்திற்கு மூலம்; ராவணன் வந்திருந்தால் அவனுக்கும் அருள் செய்திருப்பானே என்ற அதிசய உணர்ச்சியும்தான்!

பாற்கடலைக் கடைகிறார்கள் - அமரர்கள் மட்டுமல்ல - அசுரர்களும் தான். மந்தர மலையை மத்தாகக் கொண்டு வாசுகி என்ற பெரும் பாம்பைக் கடைகயிறாகச் சுற்றிக் கடைகிறார்களல்லவா? 'ஐயோ, பாவம்! என்ன பாடு படுத்துகிறார்கள் 'சமுத்திரத்தை!' என்ற அனுதாபம் விபிஷணனுள்ளத்திலே பெருகுகிறது.

'அவ்வளவு ஹிம்ஸைக்கும் என்ன கைம்மாறு கிடைத்து விட்டது!' என்று அதிசயிக்கிறது அதே உள்ளம், அமிர்தத்தைக் கண்டதும். 'இதுவன்றோ நமக்கு அருள் செய்யப் போகும் ராமன் நிலை!' என்று குதூகலமடைகிறது விபீஷணனுள்ளம்.

இத்தகைய பேரருளிலும் ஒரு துளி கூட ராவணனுக்குக் கிடைக்கப் போவ

இல்லை. காரணம், அருளின் செட்டும் அன்று; ராவணன் 'தீர்வரும் இன்னல்' செய்தான் என்பதும் அன்று. அசுரர்களைப் போல் அமரர்களும் இன்னல் செய்தவர்களே; எனினும் அமரருக்கே அமிர்தம் கிடைத்தது! காரணம், உள்ளம் நன்னெறி நோக்கியதுதான்; சரணாகதி நெறியில் திரும்பியதுதான்.

இந்த நெறியின் பொருளும் போக்கும் ஒரு பெருங்கதை தான்; கடல்தான். சரணாகதி செய்கிறவனுடைய நற்குணத்தையோ தீக்குணத்தையோ கருதுவதில்லை, சரணாகதியை அங்கீகரிப்பவன். எனினும் ஆராய்ச்சி அறிஞன்தான்; நற்குணம் தீக்குணம் ஆகியவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவனதான் ராமன்.

ஆராய்ச்சிப் பேரறிவு மெய்யன்பில் மறைந்து விடுகிறது. அன்பு சரணாகதி செய்யும்போது, அன்பு அங்கீகரித்து விடுகிறது,—ஆராய்ந்து பாராமலே, நன்மை தீமைகளைப் பாராமலே! பாற்கடல் தன்னைக் 'கலக்கக் கண்டும்' அமிர்தம் அளித்த கதைதான்.

'குற்றமற்ற ராமபிரான் நலனும் தீங்கும் ஆராய்ந்து பார்க்கும் அறிவுப் பேராற்றல் உடையவனா யிருந்தாலும், அவற்றைக் கருதாமலே சரணம் அடைந்தவரைத் தன்னுயிர்போல் பாதுகாக்கின்ற சங்கற்பம் உடையவன்' என்ற சுக்கிரீவன் வார்த்தை, விபீஷணனுடைய தியான சிந்தனைகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்வதுபோல் காதில் விழுகிறது.

சுக்கிரீவன் சொன்ன செய்திதான் விபீஷணனது ஆனந்த பரவசத்திற்கும் காரணம். எனினும் சுக்கிரீவனை மறந்து தன் சிந்தனை அலைகளுக்கிடையே மூழ்கி விட்டான் விபீஷணன் சில நிமிஷங்களாக.

தான் பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தியைச் சொன்ன பின்பும் தன்னுடன் விரைந்து ஆவலுடன் வரவில்லையே விபீஷணன்!—என்று எண்ணியவனைப் போல் சுக்கிரீவன் பேசுகிறான். ராமனிடம் விரைவில் வருமாறு அழைக்கிறான்.

தன்னை நாடி அடைவோரை உடனே காணவேணும் என்ற ஆசையோடிருக்கிறான் ராமன் என்று சொல்லித் துரிதப் படுத்துகிறான்:

'அருத்தியன் அமலன்;
தாழா(து) ஏகுதி
அறிஞ!' என்றான்.

[அருத்தியன் – ஆசையுள்ளவன். அமலன் – குற்றமற்ற ராமன். தாழாது – தாமதியாமல். ஏகுதி – போவாய்.]

இந்தப் பாட்டு முழுமையும் பார்க்கலாம்:

திருத்திய உணர்வு
மிக்க செங்கதிர்ச்
செல்வன் செம்மல்,

'ஒருத்தரை நலனும்
தீங்கும் தேரினும்
உயிரின் ஓம்பும்

கருத்தினன் அன்றே;
தன்னைக் கழல் அடைந்–
தோரைக் காணும்

அருத்தியன் அமலன்;
தாழா(து) ஏகுதி
அறிஞ!' என்றான்.

[செங்கதிர்ச் செல்வன் செம்மல் - சூரியன் புதல்வனான சுக்கிரீவன். ஒருத்தரை நலனும் தீங்கும் தேரினும் – ஒருவரிடமுள்ள நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிபவனா யிருந்தாலும். உயிரின் – தன்னுயிரைப் போல். கழல் – திருவடிகள். அருத்தியன் – ஆசையுடையவன்.]

'உன்னைப் பார்க்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறான் ராமன், நீ கொஞ்சம் தாமதித்தால் அவனே விரைந்தோடி 'இங்கு வருவதும் சாத்தியமே!' என்று பொருள் தொனிக்க, தன்னுடைய ஆசையும் ததும்பப் பேசுகிறான் சுக்கிரீவன்:

ஒருத்தரை நலனும்
தீங்கும் தேரினும்
உயிரின் ஓம்பும்

கருத்தினன் அன்றே,
தன்னைக் கழல்அடைந்—
தோரைக் காணும்

அருத்தியன் அமலன்......

என்ற வாக்கிலிருந்து ராமனது சரணாகதி தர்மம் சுக்கிரீவனுக்கு நன்கு புலனாகி விட்டது என்பது தெளிவு.

இந்த நிலையில் சுக்கிரீவனைக் கவிஞன்,

திருத்திய உணர்வு
மிக்க செங்கதிர்ச்
செல்வன் செம்மல்

என்று குறிப்பிடுகிறான். ராமன் பேச்சினால் இவனது அறிவு சீர்திருந்தி விட்டது.

இப்படித் திருந்திய நல்லறிவு பெற்றிருப்பவன், விபீஷணனை 'அறிஞ!' என்று அழைக்கிறான். திருந்திய அறிஞன் மெய்யறிஞனைக் கண்டு கொள்கிறான்.

சித்திர ராமாயணம்

விபீஷண சரணாகதி

பி. ஸ்ரீ.

38. நோவு இன்ப சுகம்!

இரண்டு மலைகள் ஒரு சேர வருகின்றன! நாலு குன்றுகள், வேறு சில குன்றுகளுடன் விரைந்து தொடர்கின்றன! சுக்கிரீவனும் விபீஷணனும் தங்களைச் சேர்ந்தவர்களுடன் ராமனிருந்த இடத்திற்கு வந்து கொண்டிருக்கும் வைபவம்தான் இது. 'உயர்வு நவிற்சி' வேண்டாமே என்று கருதும் நூதன விவேகிகள் உண்டு. இப்படி யெல்லாம் மிகையாகக் கூறுவது கீழை நாடுகளின் மனோபாவம்; இது திருந்திய கலை உணர்விற்குத் திருப்தி யளிப்பதில்லையென்று கருதுவோரும் உண்டு.

இந்த விவகாரம் ஒரு புறம் இருக்கட்டும். இப்போது இந்தப் பாட்டின் வாயிலாக விபீஷணன் என்ற அஞ்சன மலையும், சுக்கிரீவன் என்ற மேருவும் தோழக் குன்றுகளுடன் செல்வதைக் கூர்ந்து பார்ப்போம்:

மொய்தவழ் கிரிகள்
மற்றும் பலவுடன்
முடுகிச் செல்ல,

மைதவழ் கிரியும்
மேருக் குன்றமும்
வருவ தென்னச்

செய்தவம் பயந்த
வீரர், திரள்மரம்
ஏழும் தீய

எய்தவன் இருந்த
சூழல் இருவரும்
எய்தச் சென்றார்.

[மொய் – நெருங்கி; (இங்கே) மேகம் நெருங்கி. மைதவழ் கிரியும் – கருமை பொருந்திய மலையும்; அதாவது அஞ்சன மலையும். செய் தவம் பயந்த வீரர் – செய்த தவப் பயன் கைகூடப் பெற்ற வீரர்களாகிய விபீஷணனும் சுக்கிரீவனும். திரள் மரம் ஏழும் – ஒரு சேரத் திரண்ட மராமரங்கள் ஏழும். தீய எய்தவன் – தீய்ந்து போகும்படி அம்பு எய்த ராமன். சூழல் – இடம். எய்தச் சென்றார் – நெருங்கிச் சென்றார்கள்.]

இப் பாட்டின் பொருளைக் காட்டிலும் சப்த ஜாலங்கள் கணகணவென்று மணியடிப்பது போல் நிகழ்ச்சியை முழக்குகின்றன. இசையிலே தவழ்கின்றன இருவர் வருகையும்; இவர்களுடன் முடுகிச் செல்லும் பலர் காலடிச் சத்தங்களும் கேட்கின்றன.

கிரிகளும் குன்றமும் ஸ்தூல ஆகிருதிக்கு அளவல்ல, அறிகுறிதான்; சூட்சும ஆகிருதிக்கு நினைவுக் குறி. இத்தகைய 'உயர்வு நவிற்சி'யின்றி உயர்தர இதிகாச கவிதை உருப்படுவது எப்படி?

முதலாவது தரிசனம்

விபீஷணன் நெருங்க நெருங்க இவனுக்குக் கிடைக்கும் ராம தரிசனம் எவ்வளவு வசீகரமாக நமக்கும் கிடைத்து விடுகிறது! வானரக் கூட்டம் சூழ வீற்றிருக்கிறான் சக்கரவர்த்தித் திருமகன். பக்கத்தில் வில்லுங் கையுமாகப் பாதுகாப்பு லட்சுமண ரூபத்திலே.

பக்தி நிறைந்த விபீஷணன் கண்களில்—கம்பன் கண்களிலும் தான்—பாற்கடலின் நடுவே கமலம் பூத்த கருங்கடல் போலக் காணப்படுகிறதாம் கருணைக் கடல்.

இது முதலாவது ராம தரிசனம்;

மார்க்கடம் சூழ்ந்த
வைப்பின் அங்கதன்
மருங்கு காப்ப,

நாற்கடல் உடுத்த
பாரின் நாயகன்
புதல்வன், நாமப்



பாற்கடல் சுற்ற,
விற்கை வடவரை
பாங்கு நிற்பக்,

கார்க்கடல் கமலம்
பூத்த தெனப்பொலி
வானைக் கண்டான்.

[மார்க்கடம் – மர்க்கடத்தின் தொகுதி; வானரக் கூட்டம். வைப்பின் – இடத்தில். அங்கதன் மருங்கு காப்ப – அங்கதன் பக்கத்தில் நின்று பாதுகாக்க. நாற்கடல் உடுத்த – நாலு கடலை ஆடையாக உடுத்துக் கொண்ட. பாரின் – பூமியின். நாயகன் – தசரதன். புதல்வன் – சக்கரவர்த்தித் திருமகன். நாமப் பாற்கடல் – பிரசித்தமான பாற்கடல். விற்கை வடவரை – வில்லைக் கையிலே பிடித்த வடமேரு போன்ற லட்சுமணன். பாங்கு நிற்ப – பக்கத்திலே நிற்க. கார்க்கடல் – கருங்கடல்.]

வெள்ளை வானரங்களுக் கிடையே நீல மேக சாமள மூர்த்தியைக் காண்கிறான் விபீஷணன். கண்ணுற்றதும், முற்காலத்தில் விண்ணவர்கள் தொழுது வேண்ட, பாற்கடலின் அந்தத் தூய வெண்ணிற அலைகளுக்கிடையே சேஷசயனப் பள்ளி தீர்ந்து வீற்றிருந்து அபயதானம் செய்த அந்தக் கோலம் நினைவிற்கு வருகிறது.

இப்போதுதான் அந்த ஆதிசேஷ சயனத்தை விட்டுப் பள்ளி தீர்ந்து அலை கடல் நடுவே அருள் செய்து கொண்டிருக்கிறானோ!— இந்த மயக்கம் ஏற்படுகிறது விபீஷணனுக்கு.

இதே காட்சியை வசிஷ்டனும் கண்டதாகத் 'திருஅவதாரப் படலம்' தெரிவிக்கிறது :

அலைகடல் நடுவண் ஓர்
அனந்தன் மீமிசை
மலையென விழிதுயில்
வளரு மாமுகில்,
'கொலைதொழில் அரக்கர்தம்
கொடுமைதீர்ப்பன்' என்(று)
உலைவுறும் அமரருக்(கு)
உரைத்த வாய்மையை.

தியான வாசலைத் திறந்து கொண்டு வசிஷ்ட முனிவன் கண்ட அதே தரிசனம் இப்போது விபீஷணனுக்கும் கிடைத்திருக்கிறது பக்தி வாயிலாக :

அள்ளிமீ(து) உலகை
வீசும் அரிக்குலச்
சேனை நாப்பண்
தெள்ளுதண் திரையிற்
றாகிப் பிறிதொரு
திறனும் சாரா
வெள்ளிவெண் கடலின்
மேனாள், விண்ணவர்
தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தான்
என்னப் பொலிதரு
பண்பி னானை.

[அள்ளி மீது உலகை வீசும் அரிக்குலச் சேனை – இந்தப் பூவுலகத்தையே அள்ளியெடுத்து வீச வல்லவர்கள் என்று கருதத் தக்க வலிமை வாய்ந்த கூட்டமாகிய வானர சேனை. நாப்பண் – நடுவே. தெள்ளு – தெளிந்த. தண் திரையிற்றாகி – குளிர்ந்த அலைகளை உடையதாகி. பிறிது ஒரு திறனும் – வேறொரு தன்மையும். சாரா – சேராத. பொலிதரு – பொலிகின்ற.]

இரண்டாவது தரிசனம்

பக்தி வாசலைத் திறந்து கொண்டு பகவானைத் தரிசிக்கப் போகும் உணர்வுடன் வந்து கொண்டிருக்கிறான் விபீஷணன். இப்படி வரும்போதே,

பஞ்செனச் சிவக்கும்
மென்கால் தேவியை

ராமன் பிரிந்திருக்கிறானே என்ற அந்த நினைவும் வருகிறது.

அலைகள் வளைந்து மடிகின்ற அந்தக் கடற்கரையின் வெண் மணற் பரப்பிலே வீற்றிருக்கும் சாமள மூர்த்தியைச் சீதா தேவியின் கண்மணியாக நோக்குகிறான் :

கோணுதற்(கு) அமைந்த
கோலப் புருவம்போல்
திரையும் கூடப்

பூணுதற்(கு) இனிய
முத்தின் பொலிமணல்
பரந்த வைப்பில்,

காணுதற்(கு) இனிய
நீள வெண்மையிற்
கருமை காட்டி,

வாணுதற்(கு) அமைந்த
கண்ணின் மணியென
வயங்கு வானை.

[கோணுதற்கு அமைந்த — வளையும் தன்மையுள்ள. கோலப் புருவம் போல்— அழகிய புருவத்தைப்போல். திரையும் கூட-அலைகளும் பொருந்த. பூணுதற்கு— அணிந்து கொள்வதற்கு. முத்தின்—முத்துக்கள் போல். பொலி மணல்-பொலி கின்ற மணல். பரந்த வைப்பின்—பரந்த கடற்கரைப் பகுதியில். நீள வெண்மை யில் — நீண்ட வெண்ணிறத்தில். வாள் நுதற்கு—ஒளி பொருந்திய நெற்றியை யுடைய சீதைக்கு. வயங்குவானை—விளங்குகிற ராமனை.]

துஷ்ட நிக்கிரகம் செய்து சிஷ்ட பரி பாலனம் செய்ய வந்த அவதார மூர்த்தி யாக முதன் முதல் கண்டான் ராம பிரானை. இப்போது சீதாபிராட்டியின் கண்மணியைப் பார்க்கிறான்.

என்ன பிரிவு!—அவதார மூர்த்திக்கும் இந்தத் துயரமா? ஆனால் அவதாரப் பெரு நோக்கம் எப்படியாவது நிறை வேற வேண்டுமல்லவா! அதற்காக அவனும் தியாகம் புரிய வேண்டியதுதானே!

மூன்றாவது தரிசனம்

(தியாக சௌந்தரியம்)

வேறொரு காட்சி. இந்த ராஜகுல வீரன் செவிக்கினிய புகழாளனாக இருப்பதுடன் கண்ணுக்கினிய சுந்தரராஜனும் கூட. இந்த அழகைத்தான் எப்படி அனுபவிக்கிறான் விபீஷணன்!

'அந்தத் திரு மார்பிலே நவரத்தின ஆரத்தைப் பூட்டிப் பார்க்க வேணும்; வானவில்லின் வசீகர நிறங்களுடன் நீல மேக சாமள மேனியைக் கண்குளிரக் காணலாமே' என்று சாதாரணமாகத் தோன்றும் ரஸிகர்களுக்கு.

'மந்தர மலைபோலக் காணும் சுந்தரத் தோள்களில் "வாகுவலயம்" என்ற அந்த அணிகளையும் அணிந்து பார்க்க வேணும்' என்றும் தோன்றக் கூடுமாம் சௌந்தரிய ரஸிகர்களுக்கு.

ஆனால் விபீஷணன் இப்போது ரஸிப்பதோ நவரத்தின ஹாரமும் வாகுவலயமும் அல்ல; துறந்த அழகுதான்:

படர்மழை சுமந்த
காலைப் பகர்வரும்
அமரர் கோமான்

அடர்சிலை துறந்த
தென்ன ஆரந்தீர்
மார்பி னானைக்,

கடர்கடை மத்தில்
பாம்பு கழற்றிய
தென்னக் காசின்

சுடரொளி வலயம்
தீர்ந்த சுந்தரத்
தோளி னானை.



[படர்மழை — வானத்திலே படரும் தன்மையுள்ள மேகம். சுமந்த காலை — நீரைச் சுமந்து கொண்டு வானமெங்கும் படர்ந்த காலத்தில். பகர்வரும் அமரர் கோமான் — சொல்லுதற்கரிய பெருமையுள்ள தேவ ராஜாவின். அடர் சிலை — நெருங்கிய வில்; அதாவது, இந்திர தனுசு என்ற வானவில். ஆரம் திர் மார்பினுனை — நவரத்தின ஆரம் திரந்த மார்போடு கூடியவனை. கடர் — கடல். கடைமத்தில் — கடைந்த மத்தாகிய மந்தர பர்வதத்திலிருந்து. பாம்பு கழற்றிய தென்ன—கடை கயிறாகிய வாசுகி கழற்றப் பட்டது போல். காசின் — இரத்தினங்களால். சுடர் ஒளி வலயம் — சுடர்கின்ற ஒளியுள்ள வாகுவலயம்.]

விபீஷணனது தூய உள்ளத்தை வசிகரிப்பது செல்வம் அன்று; ஆபரண சோபை அன்று, தியாக சௌந்தரியம் தான்; துறந்த செல்வம்தான். அருள் ததும்புகின்ற ரூப சம்பத்து, ராமனைத் 'திரு உருப் பொலியும் ஓர் செல்வனு'க்கு கிறது.

பாற்கடலிடையே கண்டது போல் ராமனை முதன் முதல் கண்ட விபீஷணன், கடைசியாகத் தியாகத்திலே மானுடம் கண்ட வெற்றியாகப் பார்த்துப் பரவசமாகிறான் :

கற்றைவெண் ணிலவு
நீக்கிக் கருணையாம்
அமிழ்தம் காலும்

முற்றுறு கலையிற்
றூய முழுமதி
முகத்தி னானை,

பெற்றவன் அளித்த
மோலி இளையவன்
பெறத்தான் பெற்ற

சிற்றவை பணித்த
மோலி பொலிகின்ற
சென்னி யானை.

[கற்றை—தொகுதி. காலும்—கக்குகிற. முற்றுறு—நிறைந்த. கலையிற்றூய—கலைகளையுடைய. அளித்த—கொடுத்தருளிய. சிற்றவை—சிறிய தாயான கைகேயி. பணித்த—நியமித்த. மோலி—(இங்கே) ஜடாமகுடம். சென்னி—தலை.]

நிறைந்த கலைகளால் கிடைக்கும் பண்பாடும் மதி நலமும் ராமனுடைய முகத்திலே ஜொலிக்கின்றன என்பதும், அத்தகைய பண்பாட்டின் பயனாக அம்முகம் கருணை பொழிகிறதென்பதும், கருணையின் விளைவாகிய தியாகம் இன்பமாகி இனிமையாகி அழகாகித் திருமேனிக்கு வசிகர சோபை தந்திருக்கிறது என்பதும் குறிப்பு.

ஒவ்வொரு கலையும் முழு வட்டத்தின் ஒரு சிறு வளைவு என்று வைத்துக் கொண்டால், எல்லாக் கலைகளும் சேர்ந்தது அம் முழு வட்டம் எனக் கருதலாகும். அத்தகைய ஒரு சந்திர வட்டம், ஒரு சந்திர பிம்பம், ராமன் திருமுகம்.

'முழு மதி முகம்' என்ற சொற்றொடரில் பூர்ண சந்திரனுக்கும் பூர்ணமான புத்திக்கும் ஒருவகைச் சிலேடை அமைந்திருக்கிறது எனலாம்.

விபீஷணன் ராமனது முழுமதி முகத்தை, அந்தச் செந்தாமரைத் தடங்கண்களை, முகத்திலும் கண்களிலும் சுடர்கின்ற புதிய புதிய அழகுகளை, வியப்புக்களை அனுபவிக்கிறான்; அவற்றால் முற்றும் வசிகரிக்கப் படுகிறான்.

அந்தக் கருணையாம் அமிழ்தத்தை — ஆம், அவ்வளவு தியாகத்திற்கும் அதிசய ஊற்றாகிய அந்த அமுத வெள்ளத்தைப் — பருகி வெறி கொள்கிறான்.

ராமன் நகர் நீங்கி வனம் புகுவானென்று கேள்விப்பட்டதும் அயோத்தி நங்கைமார்,

'செந்தா மரைத்தடங்கண்—
செவ்வி அருள்நோக்கம்

அந்தோ, பிரிதுமோ ?
ஆ, விதியே! ஓ!' என்பார்

என்றவாறு தங்கள் விதியை நொந்து கொண்டார்கள்.

அவர்களுடைய நோவு விபீஷணனுக்கு இப்போது இன்ப சுகம்! அந்த நஷ்டம் இவனுக்குத்தான் எவ்வளவு லாபமாகி விடுகிறது!

* * *

காவிய நாயகனாகிய ராமனது அழகுமாட்சி, வேறு கதா பாத்திரங்கள் முதன் முதல் பார்க்கும்போது, வசிகரமாக வருணிக்கப்படுவதை ஒரு முறையாகக் கையாண்டு வருகிறான் கவிஞன்.

விபீஷணன் ஓர் அபூர்வமான குண சிருஷ்டி; இவன் ராமனை முதன் முதல் தரிசிப்பதன் வாயிலாக ராமனது மாட்சியும் அபூர்வமாக வெளிப்பட வேண்டுமல்லவா! அத்தகைய அதிசயப் புதுமையுடன் பொலிகின்றது, தியாக சௌந்தரியமே உருப்பெற்று விளங்குவது போன்ற ராமரூபசித்திரம், விபீஷண தரிசனத்தின் வாயிலாக.

சித்திர ராமாயணம்

விபீஷண சரணாகதி

பி.ஸ்ரீ.

38. ஓர் அமர சித்திரம்

சுக்கிரீவன் ராமனை முதன் முதல் பார்த்தபோது உத்தம புருஷனாக, தியாக சுந்தரனாகக்கண்டான். பிறகு காதலோடு நோக்கினான். உத்தம புருஷன் லட்சிய புருஷனாகக் காட்சி வழங்கினான். உள்ளுக்குள்ளே மூழ்கிப் பார்த்துச் சித்தாகாசத்தில் தோன்றிய ஒரு மின்வெட்டிலே, தேவ தேவனாக, புருஷோத்தமனாகப் பார்த்து விட்டான் ராமனை.

விபீஷணனோ ராமனது தேவ சொருபத்தை — புருஷோத்தம நிலையை — முதன் முதல் காண்கிறான். பிறகு சீதா பிராட்டியின் கண்மணியை நோக்குகிறான்; 'அந்தத் தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு இளைய' சகோதரன் என்ற நிலையில் கண்ணீருங் கம்பலையுமாகப் பார்க்கிறான். கடைசியாகத் துறந்த செல்வனாக, அதிவீரனாக, தியாக சுந்தர புருஷனாகக் கண்டு கொள்கிறான்.

சுக்கிரீவனுக்கு ராமாவதாரம் மானுடத்தின் வெற்றி. விபீஷணனுக்கோ இந்த அவதாரம் ஸாக்ஷாத் தர்மமாகிய தெய்வத்திற்கே வெற்றிதான்.

அறத்தின் திறம்

இப்படி ராமனைத் தரிசிக்கும் இந்த ஈடுபாட்டிலே விபீஷணன் தன்னை முழுக்க இழந்து விடுகிறான்:

வீரனை நோக்கி,
அங்கம் மென்மயிர்
சிலிர்ப்பக் கண்ணீர்
வார, நெஞ்(சு) உருகிச்
'செங்கண் அஞ்சன
மலை? அன் றுகில்,
கார்முகில் கமலம்
பூத்த(து)? அன்(று); இவன்
கண்ணன் கொல்லாம்;
ஆரருள் சுரக்கும்
நீதி அறநிறம்
கரிதோ?' என்றான்.

[அங்கம் – தன் அங்கம் முழுவதிலும். மென்மயிர் சிலிர்ப்ப – மெல்லிய மயிர் சிலிர்க்க. செங்கண் அஞ்சன மலை–சிவந்த கண்களையுடைய அஞ்சனகிரியோ. அன்று ஆகில் – அப்படியில்லா விட்டால். கார் முகில் கமலம் பூத்தது – செந்தாமரை மலர்கள் மலரப்பெற்ற நிலக் கரு மேகமோ. கண்ணன் கொல்லாம் – மகாவிஷ்ணுவே போலும். ஆர் அருள் – நிறைந்த கருணை.]

சற்றுத் தூரத்திலே பாற்கடலில் தெய்வம் போலக் காட்சியளித்த புருஷோத்தமன், நெருங்கி வந்த விபீஷணனைத் தனது எல்லையில்லாத தியாக சௌந்தரியத்தாலும் கருணையாலும் ஆகர்ஷித்துக் கொள்கிறான். உடம்பெல்லாம் மயிர்க் கூச்செறியக் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொங்க நெஞ்சுருகி விபீஷணன் ஆனந்தக் கனவுகள் காண்கிறான்.

அந்தச் 'செங்கண்' தன் மீது காதலாகிக் கசிந்து தான் அப்படிச் சிவந்ததோ? அந்த அழகுச் சித்திரம் தனக்காகத் தான் அப்படிக் கடலையும் வானையும் பின்னணியாக வைத்து வரைந்திருக்கிறதோ! தனக்குக் கருணை மழை பொழியத் தான் அந்த அஞ்சனமலை, அந்தக் கார்முகில் அப்படிக் காத்திருக்கிறதோ!

'கண்ணன் போலும்' என்று சொல்லி விட்டு, 'அறநிறம் கரிதோ!' என்று ஒரே ஆச்சரியத்தில் மூங்கி முழுகிப் போகிறான் விபீஷணன். தருமம் வெண்ணிறமாகத் தானே கற்பனை செய்யப்பட்டிருக்கிறது!

கருநிறமுள்ள இந்த அரக்கனுக்குத் தான். 'அறநிறம் கரிதோ!' என்று கண்டு பிடித்த இந்த அதிசய உண்மை உள்

ளுக்குள்ளே எவ்வளவு திருப்தியை, எவ்வளவு மகிழ்ச்சியை அளித்திருக்க வேண்டும்!

இலங்கையில் சீதா பிராட்டியைத் தேடித் திரிந்த அனுமன் முதன் முதல் விபீஷணனை உறங்கும் நிலையில் பார்த்தானல்லவா! கரு நிறமுள்ள அரக்கர்களிடையே வெண்ணிறத்துடன் தங்க முடியாதே என்று அதே கருநிறத்துடன் ஒளித்து வாழ்கின்ற தருமம் போலக் காணப்பட்டான் விபிஷணன் என்பதுஅங்கே கவிக்கூற்று.

இப்படி வருணிக்கப்பெற்ற விபீஷணன் ராமனை நேரில் கண்ணுற்றதும் 'அறநிறம் கரிதோ!' என்று ஆச்சரிய பரவசனாகி நிற்பதில் எவ்வளவு பொருள்!— என்ன ஆனந்த வெறி! ரஸிகர்களின் மனோபாவத்திற்கே விட்டு விடலாம்.

அரக்கர் பாக்கியசாலிகள்

'இப்படித் தருமத்தைக் கண்ணெதிரே கண்டு சரணாகதி செய்யக் கிடைத்ததே. என்ன பாக்கியம் பெற்றேன்! இந்தப் பாக்கியத்தை நான் பெறும்படி எனக்கு உதவிசெய்தவன் என் அண்ணனான ராவணனல்லவா!' என்று ஒரே வியப்பும் களிப்புமா யிருக்கிறான் ஒரு கணம் விபீஷணன்:

என்முனார் எனக்குச்
செய்த உதவிஎன்(று)
எம்ப லாற்றான்.

[என்முனார் – என் தமையனார். எம்பலாற்றான் – வியந்து களிப்புக் கொண்டான்.]

'இனி நீ என் விழிக்கு எதிரே நின்றால் உன்னை ஒழித்து விடுவேன்' என்று பயமுறுத்தித் துரத்திய ராவணனையும் ஒரு மகோபகாரியாகப் போற்றுகிறது இந்தச் சரணாகதனின் உள்ளம்.

ஒரே பக்திக் காதல் மயமாக நிற்கிறான் விபீஷணன். 'காதலன் அணைத்தா



லென்ன, அடித்தாலென்ன! எல்லாம் பாக்கியம் தான்!' என்ற உச்ச நிலைக்கு ஏறிவிடுகிறது இந்தப் பரம பக்தனுடைய காதல் வெறி.

இந்த நிலையில் துஷ்ட ராட்சஸர்கள் மீதும் பொறுமை ஏற்படுகிறதாம், அவன் திருக் கையால் கொல்லப்படும் பேறு பெற்று விட்டார்களே என்பதாக:

'பெருந்தவம் இயற்றி—
னோர்க்கும், போர்வரும்
பிறவி நோய்க்கும்
மருந்தென நின்றான்
தானே வடிக்கணை
தொடுத்துக் கொல்வான்
இருந்தனன்; நின்ற(து)
என்? நாம் இயம்புவ(து)
இல்லை; தீர்ந்த
அருந்தவம் உடையர்
அம்மா அரக்கர்!' என்(று)
அகத்துள் கொண்டான்.

[பேர்வரும் – போக்குதற்கு முடியாத. வடிக்கணை – கூர்மையான பாணங்களை. கொல்வான் இருந்தனன் – கொல்வதற்குச் சித்தமாக இருந்தான். நின்றது என் – இது குறித்துச் சொல்லும்படியாக நிற்பது தான் என்ன.]

மருந்து கொல்லுமா! உலகத்திற்கெல்லாம் மருந்தாக நிற்பவனே அரக்கர்களைக் கொல்லப் போகிறானும். — மரணத்தைப்



போக்கும் அமிர்தமே மரணம் விளைப்பது போல! அவர்களுடைய தவம் கொஞ்சமோ! இது இப்போது விபீஷணனது மன நிலை.

'அவன் அனுக்கிரகம் செய்தாலென்ன! — கொன்று விட்டால் தானென்ன! அவன் செய்வதெல்லாம் அனுக்கிரகம் தான்!' என்ற இந்தச் சரணார்த்தியின் நிலை ஊன்றி உணரத்தக்கது.

ஆழ்வாரின் இளகிய அன்புமயமான நெஞ்சுக்குள்ளிருந்து அமுத வெள்ளமான தமிழ்ப் பாட்டாக வெளிப்பட்டானும் இறைவன். அதே அழகன், அதே அன்பன், அதே அமுதன் தான் இரணியனது வன்னெஞ்சிலும் இருந்தானும். இந்த நெஞ்சைக் கிழித்துத் தானே திருத்த முடிந்தது!

எப்படியும் இறைவன் அருள் செய்கிறான். அறக் கருணையால் அருளுவது போல் மறக் கருணையாலும் அருளுகிறானும். 'நன்னெஞ்சே! நம் பெருமான் நமக்(கு) அருள்தான் செய்வானே' என்பது ஞானபூர்ணரான ஆழ்வாரின் அருள் வாக்கு. இது நன்னெஞ்சர்களின் நன்னம்பிக்கை. இந்த நன்னம்பிக்கை விபீஷணனையும் ஆட்கொள்கிறது.

அதனுல் தான் விபீஷணன், அரக்கர்களும் ராமனது மறக்கருணைக்கு உரியவராகும் அருந்தவம் உடையவர்கள் என்று நினைக்கிறான் :

'அருந்தவம் உடையர்
அம்மா அரக்கர்!' என்(று)
அகத்துள் கொண்டான்.

சரணாகதி வைபவம்

இனி விபீஷணன் ராமனது திருவடிகளில் வந்து வீழ்ந்து சரணாகதி செய்

வதைக் கவிஞன் என்றும் அழகு வாடாத ஓர் உயிர்ச் சித்திரமாக வரைந்து காட்டு கிறான் :

கரங்கள்மீச் சுமந்து
செல்லும் கதிர்மணி
முடியன், கல்லும்
மரங்களும் உருக
நோக்கும் காதலன்,
கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந்
தோறும், இருநிலத்(து)
இறைஞ்சு கின்றான்,
வரங்களின் வாரி
யன்ன தாளிணை
வந்து விழ்ந்தான்.

[மீச் சுமந்து – மீது சுமந்து. கதிர் மணி முடியன் – ஒளியுள்ள இரத்தினக் கிரீடத்தை உடையவன். காதலன் – பக்திக் காதலனான விபீஷணன். கருணை வள்ளல் – ராமன். இரங்கினன் நோக்கும் தோறும் – இரங்கி நோக்கும் போதெல்லாம். இருநிலத்து – பெரிய நிலத்தில். வரங்களின் வாரி - வரங்களை யெல்லாம் கொட்டிக் கொடுக்கும் சமுத்திரம். அன்ன – போன்ற. தாளிணை – இரண்டு திருவடிகள்.]

தன் கிரீடத்தின் மீது கூப்பிய கரங்களுடன் விபீஷணன் ராமனை நோக்கி வருகிறான். கல்லும் மரமும் உருகி நோக்குகின்றனவாம் இந்த அதிசயமான பக்திக் காதலை.

இத்தகைய பக்திக் காதலனைக் கருணை வள்ளல் எப்படி இரங்கி நோக்குகிறான் என்பதைக் கற்பனை செய்து கொள்ள வேண்டியது தானே !

சமுத்திரக் கரையிலே வரங்களின் சமுத்திரமாகக் கண்ட திருவடிகளைப் பற்றக் கொள்ளும் போது விபீஷணனுடைய முகத்திலே சுடர்கின்றது ஓர் அபூர்வ தேஜஸ். 'அழிந்தது என் ராட்சஸப் பிறவி !' என்ற குதூகலம் தான்,— அந்த அகத்தின் அழகு தான் — கண்ணாடியில் காணப்படுவது போல் அந்த முகத்திலே அப்படி ஜொலிக்கின்றது.

இந்த உணர்வு உவகைக் கண்ணீராக வழிய, ஸாஷ்டாங்கமாகக் காலில் விழுகிறான். இப்படிச் சரணாகதி செய்பவனை ராமனுடைய கருணை எப்படி வரவேற்கிறது!

இந்தக் காட்சியைக் கண்ணாடி போல் காட்டுகிறது இப்பாட்டு :

'அழிந்தது பிறவி !'
என்னும் அகத்(து) இயல்
முகத்துக் காட்ட,
வழிந்த கண்ணீரின்
மண்ணில் மார்புற
வணங்கி னானைப்,
பொழிந்ததோர் கருணை
தன்னால் புல்லினன்
என்ன நோக்கி,
'எழுந்(து) இனி(து) இருத்தி'
என்று, மலர்க்கையால்
இருக்கை ஈந்தான்.

[புல்லினன் என்ன நோக்கி — தழுவிக் கொண்டான் என்று தோன்றுமாறு கருணை நோக்கு நோக்கி.]

விபீஷணன் நாடியது இலங்கைச் செல்வம் அன்று ; 'செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்றவாறு திருவடி பற்றிய அருட் செல்வம் தான். எனினும் ராமன் இலங்கைச் செல்வத்தையும் விபீஷணனுக்கு அளிக்கிறான்.

அருள் சுரந்து உவகை தூண்டத் தானே கொடுக்கிறான் அரசுச் செல்வத்தை :

ஆழியான் அவனை
நோக்கி அருள்சுரந்(து)
உவகை தூண்ட,
'ஏழினோ(டு) ஏழாய்
நின்ற உலகும்,என்
பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று
காறும், வாளெயிற்(று)
அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச்
செல்வம் நின்னதே ;
தந்தேன்' என்றான்.

'கடவுளுடைய இராஜ்யத்தை முதன் முதல் தேடுங்கள். மற்றவை யெல்லாம் உங்களுக்குச் சேர்த்து வழங்கப்படும்' என்பது கிறிஸ்தவ வேதவாக்கு. 'இது என் மனத்தில் ஒரு விஞ்ஞான உண்மையாகவே புலப்படுகிறது' என்று தம் வாழ்க்கை யநுபவத்தை ஒட்டித் துணிகின்றார் சத்யாக்கிரக பரமாசாரியராகிய காந்தியடிகள்.

இந்தத் துணிவிற்குப் பிடிகையாக மகாத்மா சொல்லுகிறார்: 'மத பக்தியுடன் செய்யப்படுகின்ற ஒரு கடமையானது பல வேறு முக்கிய வினைவுகளையும் தன்னுடன் கொணர்ந்து தருகிறது' என்பதாக.

சித்திர ராமாயணம்

விபீஷண சரணாகதி

பி.ஸ்ரீ.

40. 'யாவரும் இன்பமுற்றார்'

விபீஷணன் பலனை எதிர்பாராமல் சரணாகதி செய்கிறான், பரம பக்தியுடன். ராமன் அருள் செய்யும்போதோ, 'இந்த உலகம் உள்ள அளவும், இந்த உலகத்திலே என் பெயர் நிலைநிற்கும் அளவும் நீ லங்காதிபதியாகவும் சிரஞ்சீவியாகவும் இருந்து செல்வத்தை அனுபவிப்பாய்!' என்று வரம் கொடுக்கிறான். வரங்களின் சமுத்திரம் கொட்டிக் கொடுக்கிறது பக்தனுக்கு!

சரணாகதியும் தொண்டும்

சரணாகதி செய்து 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்ற நிலைதான் பக்தனுக்கு உரியது. அடியவரைத் தாங்குவது ஆண்டவன் கடமை. அதை நினைவூட்ட நாம் யார்?

ராமன் அருளே விபீஷணன் வேண்டுவது; லங்காதிபத்யம் அந்த அருளுடன் ஒட்டிக் கொண்டு வந்து விடுகிறது!

மறந்தும்நன் புகழலால் வாழ்வு வேண்டலன்

என்றதானே தன் மந்திரிமாரிடம் விபீஷணன் சொன்னான்! இவனுக்கு ராஜ வாழ்வும் கிடைத்து விடுகிறது.

'ஒன்றுமே வேண்டாது உலகனைத்தும் ஆளுவர்காண்' என்ற நிலைக்கு அருள் தொண்டனை உயர்த்தி விடுகிறது.

'உப்பைப் போலிருப்பான் உண்மைத் தொண்டன்' என்று கூறுவதுண்டு. அருளால் உயர்ந்த தொண்டன் உப்பைப்போல் சமுதாயத்திற்கு இன்றியமையாதவன் என்பது மட்டும் பொருளன்று;

கறிவமுதில் உப்பானது தன்னை முழுக்க இழந்து அதற்குச் சுவை தருவதுபோல், தொண்டனும் தொண்டிலே தன்னை நாட்டி அதற்குள் தன்னை முழுக்க இழந்துவிட வேண்டும் என்பது மேலே சொன்ன வாக்கியத்தின் உட்பொருளாகும். அப்போதுதான் தொண்டு தொண்டாகிச் சுவை பெறுவதாகும். இப்பொருளை இந்த விளம்பர யுகத்திலே நன்கறிதல் எளிதன்று.

தொண்டன் சரணார்த்தியாகும்போது இத் தொண்டு நிலை உறுதிப் படுகிறது. பலனை இறைவனுக்கே அர்ப்பணித்து விடுவதால் தொண்டிலேயே தொண்டன் ஒடுங்கிப் போவது சாத்தியமாகிறது. இப்படிப் பரமபத ராஜ்யத்தைத் தேட, இறவனைச் செல்வங்களெல்லாம் தேடி வந்தடைகின்றன.

சரணார்த்தி சரணாகதனானதும் தொண்டு முழுவதும் அருள் வழியே இயங்குகிறது. இறையருளிலேயே — அந்த இறையின்பத்திலேயே—தொண்டும் தொண்டனும் மூழ்கிப்போக வேண்டியதுதான்.

இந்த நிலையில் தொண்டன் (சரணாகதன்) பெறுகின்ற இன்பம் உலகத்திற்கெல்லாம் எப்படியோ பொது உடைமையாகி விடுகிறதாம்:

தீர்த்தன் நல் லருளை
நோக்கிச் செய்ததோ?
சிறப்புப் பெற்றான்

கூர்த்த நல் லறத்தை
நோக்கிக் குறித்ததோ?
யாது கொல்லோ?

வார்த்தைஅஃ(து) உரைத்த
லோடும், தனித்தனி
வாழ்ந்தோம் என்ன

ஆர்த்தன உலகில்
உள்ள சராசரம்
அனைத்தும் அம்மா!

[தீர்த்தன் – பரிசுத்த மூர்த்தியான ராமன். சிறப்புப் பெற்றான் – ராமனது அருட்சிறப்பைப் பெற்ற விபீஷணன். கூர்த்த – மிக்க. யாது கொல்லோ – வேறு என்ன காரணத்தால் ஆகியதோ. வார்த்தை அஃது – அந்த வார்த்தையை. ஆர்த்தன – ஆரவாரம் செய்தன.]

இந்தப் பாட்டிலே ராமனைத் 'தீர்த்தன்' என்றும், சரணாகதனாகி விட்ட தொண்டனைச் 'சிறப்புப் பெற்றான்' என்றும் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. தன்னைச் சார்ந்தவர்களையும் பரிசுத்தனாக்க வல்லவனே தீர்த்தன்.

இறைவனைச் சார்ந்து பரிசுத்தராக்கப் பெற்ற தொண்டக் குலத்திலே விபீஷணன் பெற்ற சிறப்பு ஒரு தனிச்சிறப்பு. இந்தச் சிறப்பினால் விபீஷணனுக்குக் கிடைத்த தூய பேரின்பம் உலக சராசரங்களையெல்லாம் குளிர்ந்த தீர்த்தத்தில் நீராட்டி மகிழ்விப்பது போல் மகிழ்விக்கிறதாம்.

லங்காராஜ்யத்தை விபீஷணனுக்கு வழங்கிய தீர்த்தன், அங்கே அப்போதே அந்த முடிசூட்டு விழாவையும் நடத்தி விடப் பார்க்கிறான்:

'உய்ஞ்சனன் அடிய
னேன்' என்(று) ஊழ்முறை
வணங்கி நின்ற

அஞ்சன மேனி
யானை அழகனும்
அருளின் நோக்கித்

தஞ்சநற் றுணைவ
னை தவறிலாப்
புகழான் தன்னைத்

'துஞ்சலில் நயனத்(து)
ஐய! சூட்டுதி
மகுடம்' என்றான்.

[உய்ஞ்சனன்—உய்ந்தேன். ஊழ்முறை வணங்கி—முறை தவறாது வணங்கி. அஞ்சன மேனியான்—(இங்கே) விபீஷணன். தஞ்ச நற்றுணைவனை—தனக்கு அடைக்கலமும் நல்ல தம்பியுமாகியுள்ள. தவறிலாப் புகழான் தன்னை—லட்சுமணனை நோக்கி. துஞ்சலில் நயனத்து ஐய—உறங்காத கண்களுடன் ஸர்வ ஜாக்கிரதையாகப் பணி புரிந்து வரும் லட்சுமணனே. சூட்டுதி மகுடம்—முடி சூட்டுவாய்.]

விபீஷணனுக்குக் கிரீடம் சூட்டுமாறு ராமன் லட்சுமணனை நோக்கிக் கட்டளையிட்டு விட்டான். எனவே, மகுடம் தவிர்க்க முடியாதது. இந்த நிலையில் விபீஷணன், 'அந்தத் தம்பிக்கு (அதாவது, பரதனுக்கு)ச் சூட்டிய கிரீடத்தையே எனக்கும் சூட்டவேணும்' என்கிறான். பரதனுக்குக் கிடைத்த பாதுகா பட்டாபிஷேகமே இவனுக்கும் கிடைக்க வேணுமாம்.

'முடி சூடும் அரசு வேண்டேன்; அடி சூடும் அரசே அரசு' என்கிறான்.

விளைவினை அறியும்
மேன்மை விடணன்,
'என்றும் வியா

அளவறு பெருமைச்
செல்வம் அளித்தனை
ஆயின், ஐய!

களவியல் அரக்கன்
பின்னே தோன்றிய
கடன்மை தீர

இளையவற் கவித்த
மோலி என்னையும்
கவித்தி!' என்றான்.

[என்றும் வியா – எப்போதும் அழியாத. அளித்தனை ஆயின் – அளித்தாயேயானால். களவியல் – களவுத் தன்மை; திருட்டுத்தனம். கடன்மை – கடன். இளையவற் கவித்த மோலி – தம்பியாகிய பரதனுக்குச் சூட்டிய கிரீடத்தை; அதா



வது திருவடி நிலையை. என்னையும் கவித்தி-எனக்கும் சூட்டுவாய்.]

ராமன் சொன்னான் இலங்கையரசை விபீஷணனுக்கு அளிக்கும்போது:

ஏழினோ(டு) ஏழாய்
நின்ற உலகும்என்
பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்றுகாறும் —

இலங்கைச் செல்வம் விபீஷணனுக்கே என்றான். அதாவது, என்றும் அழியாத செல்வம்போல் அல்லவா இலங்கைச் செல்வத்தையும் ராமன் குறிப்பிட்டான்! 'அது எப்படி எப்போதும் அழியாத செல்வமாகும்?' என்று விபீஷணன் கேட்கிறான்.

இப்போது, 'அது என்றும் வியாத செல்வமும் அன்று; நீ கொடுக்குமாறு அளவற்ற பெருமையும் அதற்குக் கிடையாது' என்று கூறிய விபீஷணன், 'உன் திருவடி கிடைத்தபோதே என் சரணாகதிக்குப் பேறு கிடைத்து விட்டது; இதற்கு அறிகுறியாக உன் திருவடி நிலையே அல்லது பாதுகையே வேண்டும்' என்கிறான்.

என்ன தாழ்வு! ஆஹா, என்ன வாழ்வு! 'உன்னை லங்கேச்வரனுக்கி விடுகிறேன் பார்' என்றான் ராமன். விபீஷணனோ, 'அடி சூடும் அரசை அல்லால் அரசாக எண்ணேன் மற்றரசதானே!' என்ற ஆழ்வார் நிலையில் இருக்கிறான்!

'அரக்கர் குலத் தலைவனுக்குகிறேன் உன்னை' என்றான் ராமன். விபீஷணனோ பரதனோடு அந்தப் பாதுகா பட்டாபிஷேகத்திற்கே போட்டிபோட்டு ராம குலத்திலேயே வந்து குதித்து விடப் பார்க்கிறான்!

சரண்யன் மறுக்க முடியுமா சரணாகதனுடைய இந்த உரிமையை!

குகனோடும் ஐவ
ரானேம் முன்பு;பின்
குன்று சூழ்வான்

மகனோடும் அறுவ—
ரானேம்; எம்முழை
அன்பின் வந்த

அகனமர் காதல்
ஐய! நின்னோடும்
எழுவரானேம்;

புகலருங் கானம்
தந்து புதல்வரால்
பொலிந்தான்
உந்தை!



[ஐவரானோம் – ஐவர் ஆனோம். குன்று சூழ்வான் மகனோடும் – சூரிய புத்திரனான சுக்கிரீவனோடும். எம் உழை-எம்மிடத்து. அகன் அமர் - உள்ளத்திலே பொருந்திய. பகலருங்கானம் - புகுதற்கு அரிய காடு. உந்தை-உன் தந்தையாகிய தசரதன்.]

அடிகுடி அரச குலம்!

குகனையும் சுக்கிரீவனையும் சகோதரர்களாக்கிக் கொண்ட ராமன் இப்போது விபீஷணனையும் சேர்த்துக் கொண்டு 'நாங்கள் எழுவர்' என்று கூறியதுமே, விபீஷணனது தாபமும் தாகமும் தீர்ந்து போய் விடுகின்றன. ராம சௌந்தரியம் பருகி அருளையும் அள்ளிப் பருகிய சரணாகதனுக்கு இனி வேறு என்ன தேவை தான் இருக்க முடியும்!

'அகன் அமர் காதல் ஐய!' என்று விபீஷணனைக் கொஞ்சிக் குறிப்பிடுவது விபீஷணனது தனிச் சிறப்பைப் பாராட்டுவதாகும். காட்டுத் தம்பியாகிய குகனைக் காட்டிலும், கிஷ்கிந்தை மலைத் தம்பியாகிய சுக்கிரீவனைக் காட்டிலும், கடற்கரைத் தம்பியாகிய விபீஷணனை விசேஷமாக அபிமானிப்பதற்கு இவனுக்குக் கடைசித் தம்பி என்ற அருமையும் உரிமையாகக் கிடைத்து விட்டதல்லவா?

விபீஷணன் தம்பியாகக் கிடைத்தது தனக்கு மட்டுமல்ல; இட்சுவாகு குலமாகிய தன் குலத்திற்கே பெருமை என்கிறான்.

புகலருங் கானம்
தந்து புதல்வரால்
பொலிந்தான் உந்தை!

என்று முடிப்பதிலேயே இந்தக் கடைசித் தம்பியின் அருமை பெருமைகள் எவ்வளவு நன்றாக வற்புறுத்தப்படுகின்றன! கடைசிக் குழந்தையிடம் வயது முதிர்ந்த தந்தைக்குள்ள அபிமானம் தொனிக்கிறது 'உந்தை' (உன் தந்தை) என்று ராமன் முடிக்கும் இந்த வார்த்தையிலே.

நாட்டிலே சக்கரவர்த்திக்கு நால்வரே புதல்வர். இரண்டு பிள்ளைகளைக் காட்டுக்கு அனுப்பிய பின் புத்திர சம்பத்து அதிகரித்து விட்டதாம் சக்கரவர்த்திக்கு. யாகம் பெற்றது நாலு பிள்ளைகளை; தியாகம் பெற்றது ஏழு பிள்ளைகளை!

ராமனது இந்த அருளுரையுடன் 'விபீஷண சரணாகதி', அருள் - திறத்தைப் போலவே கதைத் திறத்திலும் உச்ச நிலையை அடைந்து விடுகிறது.

இருவரும் இன்பம்
உற்றார்; யாவரும்
இன்பம் உற்றார்;
பொருவரும் அமரர்
வாழ்த்திப் பூமழை
பொழிவ தானார்.

[இருவரும் — ராமலட்சுமணரும். பொருவரும் அமரர் — ஒப்பில்லாத தேவர்கள்.]

ராமன் அருள் மழையும் தேவர் பூமழையும் பொழிய, இந்தச் சரணாகதி வைபவம் இனிது முடிகிறதென்றே சொல்லவேண்டும், ஆனால் கதை நிகழ்ச்சியின் தொடர்ச்சியிலே ராமன் ஆணையால் நிகழும் வேறொரு செயலும் இந்த வைபவத்திற்கு ஒரு பின்னலங்காரமாக அமைகிறது.

இலங்கைச் செல்வம் பெற்ற விபீஷணனை ஊர்வலம் செய்விக்குமாறு ராமன் கட்டளையிடுகிறான். எந்த ஊரை எப்படி வலஞ் செய்விப்பது! ஏன்!

விபீஷணனுக்கு ராஜமரியாதை செய்து பார்க்க விரும்புகிறது ராமனுள்ளம். லௌகிகமாய்ப் பார்த்தால், அங்கீகரிக்கப் பட்டவனுக்கு ஊக்கம் அதிகரிக்கவும், ராமனுடைய பரிவாரங்களுக்கு விபீஷணனிடம் நன்மதிப்பு ஏற்படவும் இந்த ஊர்வலம் நடைபெறுகிறது. 'இந்தப் படைவீட்டை, ஊர்வலம் செய்விக்க வேணும்' என்பது கட்டளை.

அப்படியே லட்சுமணனும் சுக்கிரீவனும் ஊர்வலம் செய்விக்கிறார்கள் விபீஷணனை, அந்தச் சேனை தங்கியுள்ள அந்தப் பாசறையை!

அந்தமில் குணத்தி
னானை அடியிணை
முடியி னோடும்
சந்தன விமானம்
ஏற்றி வானரத்
தலைவர் தாங்க,
'இந்திரற்(கு) உரிய
செல்வம் எய்தினான்
இவன்!' என் றேத்தி
மந்தரத் தடந்தோள்
வீரர் வலம்செய்தார்
தானை வைப்பை.

[அடியிணை முடியினோடும்—ராமனது திருவடி நிலையாகிய கிரீடத்துடனும், சந்தன விமானம்—தேர்போல் தோன்றுகிற விமானம். மந்தரத் தடந்தோள் — மந்தர மலைபோன்ற விசாலமான தோள்கள். தானை வைப்பை- பாசறையை.]

இந்திர சம்பத்தா! — ராம ராஜ்ய சம்பத்தே கிடைத்து விடுகிறதல்லவா!